REGD; M. 4642

# திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 19—12—48 | இதழ் 27



1—12—48-ல் சென்னைப் பிரசிடென்சி கல்லூரியில் சென்னை மாகாணக் கல்லூரிகள் சார்பாக நடைபெற்ற தமிழ்ப் பேச்சுப் போட்டியில் நாலு மாணவர்களும், இரண்டு மாணவிகளும் கலந்துகொண்டனர். அவர்களுள் சட்டக் கல்லூரி மாணவர் தோழர் ஆர். இளம்வழுதி, பி. ஏ. (ஆனர்ஸ்) வெற்றி பெற்றார்.

## 'கொலைகாரி'

16-ம் பக்கத் தொடர்ச்சி

பொழுது, அது வேதனையைத் தாங்க முடியாமல், மற்ற கால்களை அடித்துக் கொள்ளுவதைப் பார்த்து, ஏதோ சந்தோஷத்தால் தான் அவ்வாறு துப்பி செய்கிறது என்று குழந்தைகள் நினைத்துக் கொள்ளுமாமே, அதே போன்று அவளைக் கிணற்றிலிருந்து வெளியில் எடுத்துவிட்டு இறக்காமல் காப்பாற்றியது சமுதாயம்! ஆனால் மூன்று குழந்தைகளும் இறந்து விட்டன!

கொலை செய்தாள் பக்சம்மாள்! அதுதான் அவள் பெயர். தற்கொலையும் செய்து கொள்ள முயன்றாள்! சிறைச்சாலையிலே தள்ளப்பட்டாள். இ. பி. கோ 302—303 'சட்டங்களின் கீழ் குற்றம் சுமத்தப் பட்டாள். குற்றங்களை மறுக்கவில்லை. ஏற்றுக் கொண்டாள். குற்றவாளி என்று தீர்மானித்து நீதிபதி, சட்டத்தில் குறித்துள்ளபடி, உயிருள்ள வரை கடினகாவல் என்று தண்டித்து விட்டார்.

தீர்ப்பளித்த செஸ்ஷன்ஸ் நீதிபதி, 'தான் பெற்ற குழந்தைகளையேகிணற்றில் தள்ளிக்கொலை செய்துவிடும் அளவிற்கு தாய்மையை மறக்கச் செய்ததற்குக் காரணம் கொடிய வறுமைதான்' என்று குறிப்பிட்டிருக்கிறார். சர்க்கார் கருணைக்கு முழுதும் பாத்திரமானவள் பச்சம்மாள் என்றும் குறித்துள்ளார்.

தண்டனையைக் குறைக்கவேண்டுமென்று உயர்நீதிமன்றத்திற்கு மனுச் செய்துகொள்ளப்பட்டது. தங்களுக்கு அதிகாரமில்லை என்று மனுவைத்தள்ளிவிட்ட நீதிபதிகள்,

> "இது இருதயத்தைப்பிளக்கக் கூடிய தன்மையுடையது, குற்றவாளி பெருங்கருணைக்குப் பாத்திரமானவள். பயங்கரமான வறுமையின் காரணமாக, தனது மூன்று குழந்தைகளையும் காப்பாற்ற முழுதும் இயலாமல் போகவே, சிறுகச் சிறுகக் குழந்தைகள் பட்டினியால் இறக்கவும் சிலநாள் சென்ற பின் அதே முடிவைத் தானும் அடைவதைக் காண்பதைக் காட்டிலும், ஓரே அடியாகக் குழந்தைகளைக் கொன்று தானும் தற்கொலை செய்து கொள்வதே மேலானது என்று தீர்மானித்துவிட்டாள்,

என்று குறிப்பிட்டுள்ளார்கள். இந்த நீதிபதிகளும், ஒவ்வொரு குற்றத்திற்கும் ஒவ்வொரு ஆண்டு வெறுங்காவலாகச் சர்க்கார் மாற்றுவது நல்லது என்றுகூறியுள்ளார்கள்.

"பயங்கரமான வறுமை" டனைவி மக்களை விட்டுப்பிரிய வைத்தது கணவனை. அதே வறுமை, மூன்று குழந்தைகளை, தனது கைகளாலேயே கொன்றுவிடும் அளவிற்குத் துணிவைக்கொடுத்தது தாய்க்கு. தனக்கும், தற்கொலை செய்துகொள்ளும் நெஞ்சுறுதியைக் கொடுத்திருக்கிறது. இந்த உண்மையை—வேதனை தரும் விசித்திரமான போக்கிலே உள்ள இந்த நாட்டில் உள்ள நிலையை நீதிபதிகள்—சட்டத்தின் பாதுகாப்பாளர்கள் எடுத்துக் காட்டி இருக்கிறார்கள். இதுபோன்ற பச்சம்மாள் ஒருத்தியல்ல, பலர் நாட்டில் இருக்கிறார்கள் என்று அறிவித்திருக்கிறார்கள் அந்த நீதிபதிகள். பச்சம்மாளின் நிலையையும், அதனால் உண்டான நினைப்பையும், மேற்கொண்டு நடந்த நிகழ்ச்சியையும், இவைகள் ஒவ்வொன்றுக்கும் உள்ள — அறுத்தெறிய முடியாத தொடர்பையும், சாதாரணமக்களும் தெரிந்துகொள்ளக்கூடிய முறையில், விளக்கிக் கூறி இருக்கிறார்கள். பொறுப்புள்ள நீதிபதிகள், தங்கள் பொறுப்பை நன்கு உணர்ந்து, பச்சம்மாளைக் கொலைகாரி ஆக்கினது, அவளுக்கிருந்த வறுமைதான் காரணம் என்று சுட்டிக் காட்டியுள்ளார்கள். தண்டனை கொடுப்பதோடு, அவர்கள் பணி தீர்ந்தது. ஆனால், நாட்டிலே உள்ள வறுமையை, நல்லவர்களைக் கொலைஞர்களாகவும் கொள்ளைக்காரர்களாகவும் ஆக்கிவிடும் சக்தி பெற்றுள்ள வறுமையை மாற்றும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டியவர்கள் யாவர்? அவர்கள் கூறவில்லை; இருந்தாலும் மறைமுகமாகக் குற்றஞ் சுமத்துகிறார்கள் சர்க்கார் மீது!

பட்டினியால் சிறுகச்சிறுகக் குழந்தைகள் மடிந்திருந்தால் — சிலநாள் சென்றபின் தாயும் அதே முடிவைப் பெற்றிருந்தால், நாட்டை ஆளவந்தார்களை, எவ்வளவு பேர் கண்டிக்க முன் வந்திருப்பார்கள்? வேறு கட்சியினர் ஆட்சியில், இந்த நிகழ்ச்சி நேர்ந்திருக்குமானால், இந்த ஆளவந்தார்களுக்கும், இவர்களைத் தாங்கி நிற்கும் ஏடுகளுக்கும், இதற்குள் நாக்கும் பேனாவும் நீண்டு போயிருக்குமே! கண்டன அலைகள், சரமாரியாகக் கிளம்பி இருக்குமே! மக்கள் ஆட்சி முறையின் நுணுக்கங்களையும்—கடமைகளையும் விண் அதிர மேடைகளிலே பேசி இருப்பார்களே! அதிகாரத்தை விட்டு அகலுங்கள் என்று ஆர்ப்பாட்டம் புரிந்திருப்பார்களே! 'கருணை காட்டத் தகுதியுடையவள்' என்று நீதிபதிகள் குறிப்பிடும் அள[...]வோடு அன்றோ, இந்தநிகழ்ச்சி முடி[...] வெய்திவிடுகிறது!

வறுமை, நாட்டில் இருக்கிறது; அதன்விளைவாகப் பச்சம்மாள் பல[...] தோன்ற முடிகிறது, என்று குறிப்பி[...]டுகிறார்கள் நீதிபதிகள். சட்டத்தைப் பாதுகாப்பவர்கள் அவர்கள். சர்க்கா[...]ருக்குச் சங்கடம் விளைவிக்கும் நோக்கமுடையவர்கள் அன்று. சர்க்கா[...]ரைக் கவிழ்த்துவிட்டு, அந்த இடத்[...]தில் தாங்கள் அமரவேண்டும் என்[...]னும் சதிமதி அவர்களுக்கு இருப்ப[...]தாக எவரும் கூறத் துணியார். பொதுமக்கள் பிரதிநிதிகள் என்[...] சட்டசபையில் வீற்றிருக்கும் சி[...] பிரகிருதிகள் தங்கள் கடமையை[...] உணர்ந்து, நாட்டிலுள்ள உண்மை[...]யான நிலையை எடுத்துக்காட்டத் தவறிவிட்ட நாட்டின் கேவல[...] நிலையை, சர்க்காருக்குச் சுட்டிக் காட்டுகிறார்கள் நீதிபதிகள்.

சென்னை சர்க்காருக்குக், கருணை காட்டுமாறு மனுவொன்றை சமர்ப்பித்திருந்தாள் பச்சம்மாள். அ[...] பற்றி விளக்கம் கோரும் வி[...]வொன்று எழுந்தது சட்டசபையில். வெகு அலட்சியமாக மந்திரி மாத[...] மேனன், 'கணவன் கைவிட்டானு[...] —வறுமையாய்—மூன்று குழந்தை[...]

(7-ம் பக்கம் பார்க்க)


## அறிவிப்பு

சி. என். ஏ. எழுதிய
"வாழ்க்கைப் புயல்"
0—12—0

"சிந்தனை விருந்து"
0—4—0

இரண்டு நூல்களுக்கும் ஒரு ரூபா[...] இரண்டணா முன்டணம் அனுப்பி[...] பெற்றுக்கொள்ளவும். மொத்த வி[...]பனையாளர்கள் 25% கழிவுநீக்கி முன் பணம் அனுப்பவேண்டும். வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

பரிமளம் பதிப்பகம்.
காஞ்சிபுரம்

# பிஸ்மார்க் வருகிறார்!

“அடித் தொண்டையைப் பிடுங்கிக் கொண்டும், கனைத்தும், உரப்பியும், கடுமூச்சு விடுத்தும், நெடு மூச்சு எடுத்தும், உதட்டை நெளித்தும், மூக்கை உதறியும் பேசப்படும் மொழிகள் போலன்றி, யாதொரு வருத்தமுமில்லாமல், இமிழென இசைக்கும் தேன்மொழி நம் தமிழ் மொழியாகும். கேட்கக் கேட்கத் தெவிட்டா விருந்தாய், செவியும் உள்ளமும் குளிர்விக்கும் தகையது. பொருள் தெரியாதோரையும் செந்தமிழ் தன் இன்னிசை கொண்டு சித்தம் திறை கொள்ளும். தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம், முதலிய தென்னிந்திய மொழிகளுக்குத் தாய் மொழியாக உள்ளது. இத்தகைய அன்பு மொழியாம் அருந்தமிழ் மொழியின் இன்ப வளத்தின் அருமை பெருமையினைச் சாற்றிட, நினைத்திட, மதித்திட, அறிந்திடச் சார்கின்றதோறும் வாயெலாம் தித்திக்கும், மனமெலாம் தித்திக்கும், மதியெலாம் தித்திக்கும், மன்னிய மெய்யறிவெலாம் தித்திக்கும், என்னில் இதனால் உண்டாகும் இன்பப் பெருக்கு இயம்பற்கரிதென்பது மிகையே யன்றோ!”

* * *

தேன் மொழி — தென்னாட்டு மொழிகட்கெல்லாம் தாய் மொழி —அதன் அருமை பெருமையை, தொன்மை இனிமையை நினைத்தாலே மனமெலாம் தித்திக்கும், என்று கூறப்படுகிறது—அதன் இனிமையும் தொன்மையும் வளமும் இருக்கட்டும் — அதன் இன்றைய நிலையையும், அதற்குள்ள எதிர்காலத்தையும் எண்ணினால், அச்சமும் துக்கமும் பிறக்கவில்லையா, என்று கேட்கிறோம். தமிழ் மொழியின் சிறப்பினை, விளக்கிடும், மேலே உள்ள குறிப்பு — இன்று — இந்தி எதிர்ப்பாளர்கள் கூறுவதுமல்ல— தமிழ்ப் பேராசிரியர், ஜி. சுப்பிரமணியப் பிள்ளை, என்பவர் தீட்டிய கட்டுரையிலே, காணப்படுவதாகும். அவர் ஈரோடு வழி செல்பவரல்ல— அரசாட்சியைக் கவிழ்க்கவோ கைப்பற்றவோ, எண்ணிடும் அரசியல் சூழ்ச்சிக்காரரல்ல — ஆசிரியர் — அவர் கூறுகிறார், தமிழ் மொழியின் சிறப்பினை—அவர் போன்றார் இது போல் கூறிடும்போது நமக்கு, தமிழின் எதிர்காலத்தைப் பற்றிய எண்ணம், எப்படி எழாமலிருக்கும்? தமிழுக்கு வந்துகொண்டிருக்கும் பேராபத்தைப் பற்றி எப்படி எண்ணாமலிருக்க முடியும் — எண்ணும் போது, எப்படி அச்சம் புகாதிருக்க முடியும்.

* * *

தமிழ் வளமுள்ள மொழி
இந்தி வளமற்ற மொழி

* * *

தமிழில் இலக்கியம் ஏராளம்
இந்தியில் இலக்கியம் இல்லை

* * *

தமிழ் தொன்மை வாய்ந்தது
இந்தி நேற்றுப் பிறந்தது

* * *

என்று, இந்தி ஆதரிப்பாளரே கூறுகின்றனர்—கூறிவிட்டு— இந்தி படித்தாக வேண்டும் என்று பேசுகின்றனர்—காரணம் காட்டி!!

இந்தி படித்தால்தான் மத்திய சர்க்காரிலே உத்யோகம் கிடைக்கும்.

இந்தி, இந்தியாவின் பொது மொழியாக, தேசிய மொழியாக, துரைத்தன மொழியாக, ஆகப் போகிறது, ஆகவே இந்தியைப் படித்தாக வேண்டும் என்று கூறுகின்றனர்.

இந்திக்கு, துரைத்தன மொழி என்ற நிலை கிடைத்துவிட்டால், பிறகு, வளமுள்ள இனிமையுள்ள தமிழ் பற்றி, தமிழாசிரியர்கள், எவ்வளவு கூறினாலும், ஏற்றம் எங்ஙனம் கிடைக்கும்?

அவன் அழகு—ஆற்றல்—அறிவு —எல்லாம் அவன் அரசனாக வீற்றிருக்க வேண்டியவன், என்பதை எடுத்துக் காட்டுகின்றன—ஆன்றோர் பலரும் அதுபோன்றே கூறுகின்றனர்—ஆனால் அவலட்சணம் படைத்த ஒரு அறிவிலி அரியாசனத்து அமர்த்தப்படுகிறான் என்றால், எப்படி இருக்கும் நிலைமை? அதுபோல், தமிழ் மொழியின் தொன்மையையும் இனிமையையும் அறிந்தோர் கூறக் கேட்டு ஆமென்று கூறிவிட்டு, எனினும் இந்தியே பொது மொழியாக, துரைத்தன மொழியாகப்போகிறது என்றும் கூறுகிறார்களே, அவர்களின் போக்கை, என்னென்பது!

* * *

தமிழின் இனிமையை பெருமையை அறிந்த தமிழறிஞர் “சென்னைக்கு வடக்கே தமிழ் தலையெடுக்க முடியவில்லை, தமிழன் யார், தமிழ் யாது என வடநாட்டாருக்குத் தெரியாது.” என்று கூறிவிட்டு, “வெளிநாட்டோர் அதை வணக்கம் செய்தல் வேண்டும்” என்று கூறுகிறார்.

அவ்வளவு ஆற்றலுள்ள செயலைச் செய்யாதிருக்கும் நிலையையும் மறந்துவிடுவோம் — பொறுத்துக் கொள்வோம்—கங்கைக் கரையிலும் இமயச் சாரலிலும் தமிழ் தவழச் செய்யவேண்டும், என்று சூளுரைத்துச் செயலாற்றுங்கள் என்றுகூடக் கூறவில்லை—இந்நாளில் செங்குட்டுவர்கள் இல்லை என்பதால் — ஆனால், காலத்தின் தாக்குதலாலும் கபடரின் செயலாலும் சுருங்கிய நிலையே பெற்றுள்ள தமிழுக்கு, இனியேனும் ஆபத்து நேரிடாதபடி பாதுகாக்கும் காரியத்தையாவது செய்யவேண்டாமா, என்றுதான் கேட்கிறோம்.

* * *

என் தம்பி! பதறுகிறாய்? என்ன பயம் உனக்கு? தமிழுக்கு என்ன ஆபத்து?—என்று கேட்கும் நல்லவர்கள் நாட்டிலே சிலர் உள்ளனர். எந்த மொழியும், ஏற்றம் பெற்று

வாழவேண்டுமானுல், மக்களின் மதிப்பைப் பெற்று வாழ வேண்டுமானுல், அம்மொழி, அரசாங்க அலுவல் மொழியாகவும் அமைதல் வேண்டும், என்பது அரிச்சுவடி! தமிழ் இவ்வளவு வளம் பெற்றதாகத் திகழ்வதற்குக்காரணம், முன்னுளில், முடியுடைமூவேந்தர்களும்தமிழையே துரைத்தனமொழியாகக் கொண்டிருந்தனர்—அதனுல், புலவர் கூடிடும் மன்றங்களிலும், பூவையர் ஆடிடும் பூப்பொழிலிலும், போர்க்களத்திலும், உழவர் மனையிலும் தமிழே முதலிடம் பெற்றிருந்தது. பவணத்துக்கும் பிறநாட்டுக்கும் தமிழர்கள் வாணிபம் செய்யச் சென்றனராமே கலங்களில்—அந்தக் கலங்களிலே, தமிழ் பேசியன்றோ சென்றனர்! அந்தத்தமிழுக்கு, ஆட்சியாளரின் மொழி என்ற உரிமை நிலே, இருந்ததால்தான், உயர்நிலே கிடைத்தது. ஆள்வோருக்குஉரியமொழிவேறு, மக்களுக்குள்ள மொழி வேறு, என்று நிலே இருப்பின் எம்மொழி சிறக்கும் — எம்மொழி உயரும்! இன்று, இந்தியைப்படித்தாக வேண்டும் என்று கூறுவோர், அது, நாளே, துரைத்தன மொழியாகப்போகிறது, அது கற்ருல்தான் ஆட்சிப்பணிமனேயில் இடம் கிடைக்கும் என்று கூசாது கூறுகின்றனரே, அந்நாள் வரும்போது, மக்கள்எதனே விரும்பிக்கற்பர், எம்மொழியினே நாடுவர், தேடுவர், இனிமையும் தொன்மையும் வாய்ந்ததுதான் எம் தமிழ், எனினும், அது போதாதாமே அலுவலகம்புக, எனவே அலுவலகம்புக நுழைவுச் சீட்டுப்பெற இந்தி படிப்போம், என்றுதானே எண்ணுவர்—எண்ணிட எண்ணிட, இயற்கையாக ஏற்றம், எந்த மொழிக்கு ஏற்படும், என்பதை எம்மையும் எமது கிளர்ச்சியையும் மறந்தேனும், நண்பர்கள் எண்ணிப்பார்த்திட வேண்டுகிறோம். சொந்த மொழிகற்றுப்பயனில்லே, வந்தமொழி படித்தால்தான் வாழமுடியும் என்று ஒரு ஏற்பாடு செய்துவிட்டால், பிறகு, வந்த மொழியைத்தானே, சொந்த மொழியாக்கிக் கொள்வர்! நிலேயை விளக்கிடப்பலப்பல கூறவேண்டுவதுமில்லே—ஆங்கிலத்துக்கு அரசாங்க மொழி எனும் நிலேயை ஆங்கிலர் இங்கு ஏற்படுத்தியதன் பலனே, நாம், நமது தலேமுறையில் தெரிந்து கொண்டிருக்கிறேமே! சிலப்பதிகாரம் தெரியும், சிந்தாமணி தெரியும், குறள் தெரியும், தொல்காப்பியம் தெரியும், என்று கூறினுல், மடத்திலே இடமுண்டு என்றனரேயன்றி, அரசாங்க அலுவலகத்தில் இடம் கிடைக்கவில்லேயே! இரண்டு 'கோணே' எழுத்துத்தெரிந்தால்தான் பிழைக்கலாம் — என்ற எண்ணம் குக்கிராமத்திலும் பரவி விட்டதே! ஆங்கிலம் படித்திடத்தான் துடித்தனரேயன்றி, தமிழ்பயில எவர்முன் வந்தனர்—பயின்ற சிலருக்கும் மதிப்பளிக்கவாவது முனேந்தனரா?

ஆங்கிலம் ஆட்சிமன்ற மொழி என்ற நிலே பிறந்ததும், தமிழ், தாழ்நிலே அடைந்ததை எவர் மறுக்கமுடியும்! கல்வி நிலேயங்களிலேயே கண்டோமே, 'தமிழ்ஐயா'வுக்கும், இங்கிலீஷ்வாத்தியாருக்கும், எல்லாவகையாலும் வேற்றுமைகள் கிளம்பியதை! தமிழ் ஆசிரியருக்குச் சம்பளம் என்ன? ஆங்கில ஆசிரியருக்கு என்ன?

தமிழ்மொழியில் பேசினுல், மதிப்பில்லே, என்று ஆங்கிலம் பேசுவதையன்றோ அறிவுடைமை என்று கொண்டனர்.

கிராமத்து மக்கள் வாய்பிளந்து கேட்டனரே தம்பிள்ளேகள், பட்டணம் சென்று கற்றுக்கொண்டுவந்த ஆங்கிலச் சொற்களே!

ஆங்கிலத்தின் இடத்துக்கு இந்தி, என்று தெளிவாகத் தெரிவிக்கிருர்கள்—அங்ஙனமாயின், தமிழின் நிலே என்ன? இந்திக்கு ஆங்கிலப் பதவி, தமிழுக்கு, என்ன நிலே! இதைத்தான் எதிர்கால ஆபத்து என்கிறேம். இதனே எண்ணியே, இன்றே, இந்தியை எதிர்த்தாக வேண்டும் என்று கூறுகிறேம்.

* * *

இந்தி, இரண்டெழுத்து படித்துக் கொண்டால் போதும், அந்தமொழி இந்தியாவிலே மிகப்பெரும்பாலோர் பேசும் மொழியாக இருக்கிறது, வடநாடு போகவர, இந்தி மொழி தேவை, என்று இப்படி எல்லாம் பேசிப்பேசி, இப்போது, அழுத்தந்திருத்தமாக, தாய்மொழியைப் புறக்கடைக்குத்துரத்துகிறேம் என்ற எண்ணமுமின்றி, கண்டிப்புடன், கூறுகிருர்கள், இந்தி, துரைத்தன மொழியாகப் போகிறது, என்று! இதைக்கேட்டு, சீற்றமோ சோகமோ கொள்ளாதவர்களிடம், சிலப்பதிகாரச் செந்தேனேக் கொட்டி என்ன பயன், குறளேக்கூறி என்னபலன்? எங்கே இருக்கும், குறளும், சிலப்பதிகாரமும்? யாரிடம்இருக்கும்?

* * *

இந்தியால் தமிழுக்கு ஆபத்து இல்லே, என்று கூறுவது எவ்வளவு நெஞ்சறிந்த பொய் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுகிறேம். இந்திக்கு ஆங்கிலப்பதவிகிடைத்து விட்டால், தமிழ்தாழ்வுருது இருக்கமுடியுமா? இந்தியை அரியாசனத்தில் அமர்த்திவிட்டு, தமிழின் அருமை பெருமையைப் பேசிப் பயன் என்ன?

இந்தி படித்தால் நல்லது—இந்தி படித்தால்தான் நல்லது — இந்தி படித்தாகவேண்டும் — இந்தியில்லாமல் என்ன செய்வது — இந்திதான் படிக்கவேண்டும்—என்று, படிப்படியாக ஏறிக்கொண்டுவரும், பேச்சினூடே வளரும் ஆபத்தை அறிய வேண்டுகிறேம். இந்தியை நுழைத்துவிட, தந்திரக்காரர்கள், சாகசமான முறையைக் கையாளும் இதேபோது சற்றுக் கண்டிப்பானவர்கள் — நேர்மையாக நெஞ்சில் உள்ளதைச் சொல்லுபவர்கள் — வெளிப்படையாகவே இப்போதே பேசுகிருர்கள், மாகாண மொழிப்பற்று — ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒவ்வொரு மொழியும், அந்தந்த மாகாண மக்கள் அந்த மொழியினிடம் பற்றும் கொண்டிருப்பது, இந்திய ஐக்யத்துக்கு ஆபத்து, அந்தப் பற்றுக்கூடாது, இப்போதே, அதனே ஒழித்தாக வேண்டும் என்று கூறுகிருர்கள். தமிழ்தான் நமது மொழி—சொந்த மொழி — இந்தி, வந்தமொழி, நமது வசதிக்காகப் படிக்கவேண்டிய மொழி, என்றுபேசினர் முதலில்! இப்போது, துணிவுடன், சொந்தமொழி, தாய்மொழி, என்று கூறுவதும் கொண்டாடுவதும், கூடாது என்று கூறிவிட்டனர்.

இந்தியை ஆதரிக்கும் சர்தார்கள் இன்றும் கூறுகின்றனர், தமிழ் சிறந்து விளங்கப் போகிறது, அதற்குத் தாழ்நிலே வாராது, ஆபத்து நேரிடாது, இந்தி தமிழை அழிக்காது, என்று—ஆனுல் முன்ஷிகள் கூறுகின்றனர், தமிழ் என்று தமிழனும், வங்காளம் என்று வங்காளியும், மராட்டி என்று மராட்டியனும், இப்படி ஒவ்

... (13-ம் பக்கம் பார்க்க)

# அதோ, நமது லட்சிய பூமி!

நமது உழைப்பு மிகமிகக் குறைவு. நமது இலட்சிய வெற்றிக்கு, ஒரே மொழியின் மூலமாக வந்து சிதறிக்கிடக்கும் பலரின் ஒத்துழைப்பையும் பெற நாம் தவறிவிட்டோம். அந்தவகையில், நமது முயற்சி ஒரு துளியும் இல்லை. இருந்தாலும், நமது கோரிக்கைக்கு இருக்கும் மறுக்க முடியாத காரணங்களையும், அதற்குள்ள அழிக்க முடியாத சக்தியினையும் நாம் நன்கு உணர்ந்திருப்பது போல், மற்றவர்களுக்கும் உணர்த்தும் ஆற்றல், நமது பலக் குறைவால்—எதிர்ப்புச் சக்தியால்—கட்டுப்படுத்தப்படுகிறதே என்று நாம் கவன்றது உண்டு. ஆனால், அந்தக் கவலையைத் துடைத்து, நமக்குப் புதிய பலத்தைத் தேடிக் கொடுத்து, இலட்சியவெற்றிக்கானகால அளவை சிறிதாக்கும், நற்பணியில், நாடாள வந்துள்ள டில்லி விடுதலை வீரர்கள், வெகு தீவிரமாகப் பாடுபடுகிறார்கள். தங்கள் நடவடிக்கைகளால், எதனை ஒழித்துக் கட்டிவிடலாம் என்று தீர்மானித்திருக்கிறார்களோ, அதே அடக்குமுறைகள், தங்கள் நோக்கத்திற்குப் படுதோல்வியைத் தரும்—தந்திருக்கின்றன என்பதைச்சொந்த அனுபவத்தின் மூலம் உணர்ந்திருந்தும்கூட, தங்கள் விருப்பத்தை நிறைவேற்ற அடக்குமுறைகளைத் தேடுவது விந்தையாகத்தான் இருக்கிறது. அடக்குமுறை வீசிய ஆதிக்கம் அழிக்கப்பட்டதும், அதற்கு ஆளான இலட்சியம் நசித்துவிடாமல், அடக்குமுறைகள் அதிகரிக்க அதிகரிக்க, அந்த இலட்சியம்மேலும் மேலும் பலம் பெறவும், முடிவில் அடக்குமுறை வீசியவர்கள் வெளியேறவும், அதற்கு ஆளானவர்கள் அதிகாரத்தில் அமரவும், இலட்சியம் வெற்றி பெறவுமான நிகழ்ச்சிகள் பலவற்றை ஏடுகள் தாங்கிக்கொண்டிருந்தும், இவர்கள் அதனை மறந்துவிட்டு நடப்பது வேதனை கலந்த வேடிக்கையாகத்தான் இருக்கிறது!

* * *

வெள்ளையர்கள் ஆண்ட நேரத்தில், விடுதலை வேட்கை நாட்டில் அதிவேகமாகப் பரவுவதைக் கண்டபொழுதெல்லாம், அந்த வேகத்தைத் தணிக்க, ஏதாவது புதிய அரசியல் சலுகைகள் தரவேண்டியது தங்கள் நீங்காக் கடமை என்று பசப்பி, தக்கது செய்ய, இருக்கும் தகுதியைத் தெரிந்துகொள்வது முக்கியம் என்று கூறி, அதற்கான ஏதாவது ஒரு கமிட்டி—மாநாடு — கூட்டுவர். காலத்தைக் கடத்த, ஏகாதிபத்தியம் கையாண்ட சிறந்த முறை இது. இவ்வாறு, நாடு சுற்றி, பல சாட்சியங்கள் பெற்று, குழுவினர் வீடு திரும்பினதும், வெளியிடுவர் நீண்டதோர் அறிக்கை. அந்த அறிக்கையில் மூலக் கோரிக்கை — விடுதலை விருப்பம் — மறைக்கப்பட்டிருக்கும். அதற்காக இருப்பதாகச் சொல்லப்படும் முட்டுக் கட்டைகளின் சக்தி பெரிதாக்கிக் காட்டப்பட்டிருக்கும். பின்னர் இரண்டொரு சலுகைகள் — தங்கள் ஆதிக்கத்திற்கு ஆபத்து வராத நிலையில்—அளிப்பர். இது அமுலுக்கு வருவதும் அவ்வளவு சுலபத்தில் இருப்பதில்லை. எவர் எதிர்ப்பையாவது காரணங் காட்டி, அமுல் நடத்துவதைத் தள்ளிப் போடுவர். இதற்குள் பல ஆண்டுகள் சென்றுவிடும். புதிய பிரச்னைகள் பல தோன்ற ஆரம்பித்துவிடும். இப்படியே—மக்களின் விருப்பம் நிறைவேற விடாமல்—பார்த்துக்கொண்டு வந்தனர் வெள்ளையர். முடிவில் வெளியேறினர்!

* * *

இதே முறையை — பிரச்னையை தள்ளிப் போடுவதின் மூலம் கோரிக்கையைக் கொன்றுவிடலாம் என்னும் கோணல் முறையை—வெள்ளையர்கள் விட்டுப்போன அதிகார பீடத்தில் அமர்ந்துகொண்டு, விடுதலை வீரர்கள் என்று மக்கள் நம்பிக்கையோடு அளித்த விருதுகளைப் பெற்றுக்கொண்டு, டில்லியிலே ஆட்சி புரியும் காங்கிரஸ் மேலிடம், மேற்கொண்டிருக்கிறது. எந்தக் கோரிக்கையையும், கோரிக்கை எவ்வளவு நியாயமானதாக இருந்தபோதிலும், கோருவோர்கள்மீது துவேஷம் கற்பித்து, கோரிக்கையைச் சாதாரணமானதாக ஆக்கிவிடலாம் என்ற தீர்மானத்தோடு செயலாற்றுகிறது.

மொழிவழியாக மாகாணம் அமைவது அவசியமானது என்ற கருத்தை மக்களுக்கு ஊட்டியதும் காங்கிரஸ் தான்; இன்று அதனை மறுப்பதும் காங்கிரஸ்தான் என்று முன்கூறினோம். மொழிவழி மாகாணம் வேண்டுமென்று, இன்று, கூறுபவர்களும் ஆத்திரத்தோடு கோபிப்பவர்களும் காங்கிரஸ் தியாகிகள் தான்; அதனை மும்முரமாக எதிர்ப்பவர்களும் காங்கிரஸ் தலைவர்கள் தான் என்றும் முன்னர் விளக்கி இருந்தோம். காங்கிரஸ் மேலிடம் என்னும் அமைப்பையே தங்கள் உள்ளங்கைகளில் மூடிவைத்திருக்கும் இரண்டொரு மேலிடத்தாருக்குத் தாங்கள் முன்கூறியபடியே மொழிவழியாக மாகாணங்களைத் திருத்தி அமைப்பது பிடிக்கவில்லை. ஆனால், தாங்கள் முன்னர் சிருஷ்டித்த சித்திரங்கள் இன்று உயிர்பெற்றுப் பேசுவதை, கண்களை உருட்டித் தங்களை உற்றுநோக்குவதை, கைகளை இறுக மூடிக்கொண்டு ஓங்குவதை, இந்தபேடித்தச்சூத்திரதாரிகளால் பார்த்துககொண்டு வேறுவேலையை கவனிக்க முடியவில்லை. முடியாது என்று சொல்லவோ — கூறியபடி நிறைவேற்றவோ — இவர்களுக்குத் துணிவு ஏற்படவில்லை. வெள்ளையர் வழியைப் பின்பற்றத் தொடங்கினர். கமிட்டி ஒன்றை நியமித்தனர். மத்திய மாகாணத்தைச் சேர்ந்த அலகாபாத் உயர்நீதி மன்றத்திலிருந்து ஓய்வுபெற்றுள்ள நீதிபதி தோழர் S. K. தார் அவர்களைத் தலைவராகக்கொண்டும், ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த டாக்டர் பன்னுலால், பீகார் மாகாணத்தைச் சேர்ந்த ஜகத்நாராயண்லால், மற்றொருவரையும் அங்கத்தினர்களாகக் கொண்டு ஒரு விசாரணைக்குழுவை நியமித்தனர். அந்தக்குழுவினர் விசாரணை செய்து கொண்டிருக்கும் பொழுதே, பட்டேல்—இப்புப்படி—கொஞ்சம் காரசாரமாகவும், பண்டிதர் நாகரிகமாகவும், முன்ஷி வில்வாமித்ரபோக்கிலும், மொழிவழி மாகாணக் கோரிக்கையைக் கண்டித்துப் பேசினர். எரியும் தீயில் எண்ணெயைப் பெய்ததுபோல் ஆயிற்று. குழுவினரில் உள்ளமுக்கியமானமூவரும், ஆரிய கலாசாரத்தை, பண்

பாட்டை—இந்தத் துணைக்கண்டம் முழுவதிலும் புகுத்தவேண்டும் என்னும் நோக்கமுடைய மாகாணவாசிகள். ஹிந்தி மொழியின் நடமாடும் உருவங்கள். இவர்களை நியமித்தவர்களும் அதே கருத்தினர். பிரச்னையைத் தீர்த்துவைப்பது அல்ல முக்கியம், கோரிக்கையாளர்களின் கண்களைத்துடைப்பதுதான் முக்கியமானது என்பது, குழுவைத் தோற்றுவித்தவர்களின் முழுநோக்கம். அவர்கள் நம்பிக்கையை இழந்துவிடவில்லை, இக்குழுவினர். அதற்கேற்றாப்போல் அறிக்கையும் வெளியிட்டுள்ளனர்.

* * *

**'இந்தியாவை ஒரு பலம் பொருந்திய 'நேஷன்' ஆக்க வேண்டும்!'**

இந்த ஒரே அளவு கோலைக் கொண்டுதான், மொழிவழி மாகாணக் கோரிக்கையை, இந்தக் குழுவினர் அளக்க முனைந்தனர். மொழிவழிமாகாணத்தின் முக்கியத்தையோ, நன்மை தீமைகளையோ, அந்தந்த மாகாணத்தின் மொழி வளர்ச்சியையோ, இவர்கள் மனதில் கொண்டு ஆராய்ந்து பார்க்கவில்லை. இந்தியாவைப் பலமான ஒரே நேஷனாக ஆக்குவது என்பதுதான் இவர்களின் நீண்ட நாள் தீர்மானம். மொழி தொலைந்து, வாழ்க்கையின் வழி தொலைந்து, மக்கள் எவ்வாறு கெட்டாலும், இந்தக் குழுவினருக்குக் கவலை இல்லை. இவர்களுடைய கவலை எல்லாம், மற்றவர்களிடத்தில் அச்சமூட்டக்கூடிய அளவிற்கு இந்தியா ஒரு நேஷனாகவேண்டும் என்பதுதான்!

இந்த முடிவுகாண — முன்னரே தீர்மானித்துக் கொண்டிருக்கிற முடிவைக் கூற—நாடு சுற்றிப் பொதுமக்கள் பணத்தைப் பாழ் செய்திருக்க வேண்டியதில்லை. வெள்ளை ஏகாதிபத்ய வாதிகளையும் தோற்கடித்து விட்டனர், இந்தத் தேசிய வாதிகள்!

மொழிவழி மாகாணக் கோரிக்கையைத் தீர்மானிப்பதற்கு, இந்த 'நேஷன்' அளவுகோலை உபயோகித்துப் பார்த்தார்களாம். பிரச்னை அளவுகோலுக்கு அடங்குவதாக இல்லையாம்.

"இந்தப் பிரிவினைக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டால், இறுதியில் முழுத் தேசமும் துண்டாடப்படுவதில் வந்து முடியும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"மொழிவழி மாகாணக் கோரிக்கையின் அடிப்படையில் துணைத் தேசிய உணர்வு இருக்கும். அது, இந்தியா என்னும் ஒரேதேசிய உணர்வு கொள்வதைக் கெடுத்துவிடும். பல துணைத்தேசியங்கள் இந்தியாவில் தோன்றவேண்டும் என்று விருப்பமிருக்குமானால், அதற்கு மொழிவழி மாகாணம் ஏற்படுத்துவதைக் காட்டிலும் வேறு நல்லவழி கிடையாது."

இவ்வளவோடு அவர்கள் நிற்கவில்லை.

"மொழிவழி மாகாண எண்ணத்திலிருந்து தோன்றும் துணைத்தேசிய உணர்வினால் உண்டாகும் ஆவேசம், தேசிய உணர்வால் ஏற்படும் ஆவேசத்தைக்காட்டிலும் சக்தி வாய்ந்ததாக இருக்கும். தேசிய உணர்வும் துணைத் தேசிய உணர்வும், ஒன்றை ஒன்று அடுக்க முயலுவதின் மூலம் உருவாகும் இரு ஆவேச அனுபவமாகும். மொழிவழி மாகாணத் துணைத்தேசியஉணர்வு சிறந்ததோர் சக்தியாக விளங்குவதோடு, அதிக அளவில் ஆவேசமூட்டக்கூடியதாகவும் இருக்கும். இந்த நிலையில், இரு தேசியத்திற்கும் மோதுதல் ஏற்படுமானால், புதிதாகக் கிளம்பியுள்ள (இந்திய) தேசியம் கண்டிப்பாகச் சீர்குலைந்துவிடும்; முடிவில் மறைந்தொழியும்."

இவ்வாறு கூறுவதின் மூலம், அந்தக் குழு மொழிவழி மாகாணப் பிரச்னையை மறுத்துவிட்டது. அத்துடன் நிற்கவில்லை. இந்திய தேசியம் வளரவும், தேசபக்தி பெருகவும், இதுவரையில் காங்கிரஸ் கொண்டிருந்த பலநாள் கொள்கையைத் தியாகம் செய்துவிட வேண்டுமென்றும் கூறுகிறது. வாக்குறுதி — நேர்மை —சத்தியம்—அவ்வளவு உயர்ந்த பண்புகளையும், புறக்கணித்து விடுமாறு கூறுகிறது. ஹிட்லர் கொண்ட அரசியல்முறையாகும் இது. வியாசர் விருந்து உண்டு பழகியவர்களுக்கு, தாரின் விருந்து வேம்பாகவா இருக்கப் போகிறது?

மாகாணங்களின்மீது குதிரை ஏறும் அளவிற்கு டில்லிக்கு அதிகாரம் வேண்டும்; கடிவாளம் போட்ட மாதிரியாக மிச்ச அதிகாரமும் டில்லிக்கு இருக்கவேண்டும். இது குழுவின் கோரிக்கை. இவ்வளவும் எதற்கு? புதிய மாகாணங்களை உருவாக்க-இந்திய தேசியத்தை வளர்க்க!

இந்தப்புதிய மாகாண ஏற்பாடும், மொழிவழி அல்ல. டில்லியின் ஆதிக்க வெறியை நிறைவேற்றுவதற்கு ஏற்றாப்போல் அமைக்கப்பெறவேண்டுமாம். வெள்ளையர்களின் பிரதிநிதிகள் போல் பேசுகிறார்கள்!

அதேநேரத்தில், குழு, மற்றொன்றையும் குறிப்பிடத் தவறவில்லை. மலையாளிகளும் கன்னடர்களும் தங்கள் தேவைகள் வேண்டிய அளவிற்குப்பூர்த்தி அடையாமல் அவதிப்படுவதாகவும், அவர்கள் தலைநகரங்களான பம்பாயும் சென்னையும், வெகு தொலைவில் இருப்பதே அதற்குக்காரணமென்றும் சொல்லுகிறது. இதற்குப் பரிகாரம் என்ன தெரியுமா? மலையாளிகளுக்கும் கன்னடர்களுக்கும் ஆவன செய்யவேண்டுமென்று, அவர்களுக்கு அண்டை வீடு என்று எண்ணிக்கொண்டு-டில்லிக்கு வேண்டுகோள் விடுக்கிறது குழு!

* * *

இந்தியதேசியமும்-துணைத்தேசியமும் மோதுகிறது! மோதிக்கொள்ளும் அளவிற்கு அவைகளில் என்ன இருக்கிறது? இந்திய தேசியத்தின் முடிந்த இலட்சியமென்ன? துணைத் தேசியத்தின் இலட்சியம், அதற்கு முரண்பட்டிருக்கக் காரணமென்ன? ஒன்றையொன்று பகைத்துக் கொண்டு வளர்ச்சி அடையவேண்டியதுதான் அதனதன் இயல்பா? இதனை, மனித முயற்சியால் மாற்ற முடியாதா? அதிகப்படியான அதிகாரத்தைத்தேசியத்திடம் ஒப்படைப்பதின் மூலந்தான் துணைத்தேசிய உணர்வை அழிக்கமுடியுமா? மனமறிந்து துணைத் தேசியம், தேசியத்திடம் சரணடைவதுதான், தேசிய வளர்ச்சிக்கு இருக்கும் ஒரே சிறந்த வழியா? இந்திய தேசியம் பலமடைவதால் பயன் பெறப்போகிறவர்கள் யார் யார்? துணைத்தேசியம் வலுவடைவதால், வாழ்வு பெறப்போகிறவர்கள் எவர்எவர்? ஒரேமக்கள்தானா? அப்படித்தான் என்றால், துணைத் தேசிய உணர்வைக்கொன்று, ஒரே தேசியஉணர்வைப்பெருக்கவேண்டிய

அவசியமென்ன? இந்திய தேசிய உணர்வில் சிலரின் நன்மைகள் மறைந்திருக்கின்றன! துணைத்தேசிய உணர்வில், அவர்களைநீங்கிய—வேறு புதிய சிலரின் நலபலன்கள் மறைந்திருக்கின்றன! முன்னையது நன்கு வளர்ந்திருப்பது; பின்னையது வளர்ச்சியடைய வேண்டிய நிலையில் உள்ளது. எனவே, இருதேசியஉணர்வுக்குள்ளும் மோதுதல் ஏற்படும் என்று அஞ்சப்படுகிறது. இந்த அச்சத்தின்விளைவுதான், தார் அறிக்கை.

ஆகவே, இருசாராருக்கும், உள்ளமும் உதடும் வெவ்வேறு பேசிக்கொண்டு இருக்கின்றன. மக்கள் முன்னேற்றந்தான், மக்களுக்கு வாழ்வு தேடுவதுதான், ஒரு ஆட்சியின்-எவர் அதிகாரத்தில் இருந்தாலும்-அடிப்படைநோக்கமாக இருக்க வேண்டும் என்ற தூயஎண்ணம் இருவருக்கும் இருக்குமானால், உள்ளத்தைத்திறந்து காட்டிப் பரிகாரம் தேடும் முயற்சியை மேற்கொண்டு இருக்க மாட்டார்களா? முன்னாள்தான் வெள்ளையர் இருந்து, இங்கு மக்களிடை வேற்றுமையைவளர்த்து வந்தனர். இப்பொழுது அவர்களுந்தான் போய்விட்டார்களே! இன்னும் ஏன், இவர்களிடை பிளவும் பிணக்கும் தாண்டவ மாடவேண்டும்?

இருவரிடத்திலும் நேர்மை இல்லை. இருவர் மனத்திலும் மாசு இருக்கிறது. வெவ்வேறு எண்ணங்கள்—ஒன்றோடொன்று ஒத்துப்போகக் கூடாதன—இவர்கள் உள்ளங்களில் குடி புகுந்து இருக்கின்றன. எனவே ஒரே பொருளை, இருவரும், ஒரே கோணத்தில் இருந்து பார்த்தபோதிலும், வெவ்வேறு இருப்பதைக்காண்கிறார்கள். 'அச்சமில்லை, அச்சமில்லை' என்று ஆர்ப்பரித்தவர்கள், உள்ளங்களிலே இன்று அச்சம் நிறைந்து போய் வழிகிறது. ஆத்ம சக்தியின் எல்லையை அளந்து பார்த்துவிட்டதாகக் கூறியவர்கள், ஆத்திரசக்திக்கு, அவநம்பிக்கை சக்தி, ஆதிக்க சக்திக்கு ஆளாகிப்போய் இருக்கிறார்கள்!

இந்த நிலையை மாற்ற, முளைவிடும் பருவத்தில் உள்ள இந்திய தேசியத்தைக் காப்பாற்ற, துணைத் தேசிய உணர்வுகளைப் பலம் பொருந்தியமத்திய சர்க்காரின் அடக்கு முறைகளால் அழித்துவிடலாம் என்று, முன்னாள் நீதிபதி கூறுகிறாரே, முன் பின் யோசியாமல், அது நடக்கக் கூடிய காரியந்தானா? நீதிபதி நிலையில் இருந்தவர், அதிகாரத்தை இவ்வளவு சிறப்பித்துக் கூறுவது, சிந்தனையைத் தூண்டக்கூடிய விஷயமாகும். நல்லகாலம், அவர் ஓய்வுபெற்ற நீதிபதி என்பது மிக்க மகிழ்ச்சிக்குரியதாகும்!

இந்திய தேசியம், முளைவிட்டிருக்கிறது; ஆனால் இன்னும் துளிர்விடவில்லை, இவ்வாறு கூறுகிறது குழு. செடியாகி, மரமாகி, பூத்துப் பிஞ்சுவிட்டுக் காய்த்துக் கனிதரும் பக்குவத்தை அடைந்தால், மக்கள் அனைவருக்கும்-உயர்வு தாழ்வு பாராமல்-அக்கனிகள் பயன் தருமா? அல்லது அது சிலருக்கு விருந்தாகவும் பலருக்கு விஷமாகவும் இருக்குமா? நாணயமாகச் சுட்டிக் காட்டவில்லை இதனை. விளைவு, அனைவருக்கும் சுகந்தரும் வாய்ப்புடையதாக இருக்குமானால், அதனை வெளிப்படையாகக் கூறத் தயக்கங் காட்ட வேண்டியதில்லை என்பதோடு, சொற்களிலே ஜாலவித்தைசெய்யவேண்டிய தேவையும் இருக்காது. ஆனால் வார்த்தைகளிலே வேடிக்கை காட்டப்படுவதைப் பார்க்கிறோம். இவ்வாறு வார்த்தைகள் துணைகொண்டு, மக்களின் வாழ்வோடு விளையாடுபவர்களைக் கண்டதும், மற்றவர்களுக்குச் சந்தேகம் வலுக்கிறது. சொல்லையும் செயலையும் நுணுகி ஆராய்வதிலே மற்றவர்களுக்குச் சிந்தனை செல்லுகிறது. இன்று சிறிய அளவு உள்ள இந்தச் சந்தேகத்வத, மனத்துள் மறைத்து வைத்திருக்கும் எண்ணங்களை, தார் குழுவின் அறிக்கை வெளிக்குக் காட்டி இருப்பதோடு, அதனை எதிர்ப்பதற்கான காரணத்தையும் கூறாமல் கூறி இருக்கிறது. மயக்க வார்த்தைகளுக்குள்மறைந்து கிடக்கும் உண்மைகளை என்றாவது மக்கள்புரிந்துகொள்ளத்தான் போகிறார்கள்! அன்று முகமூடி கிழித்தெறியப்பட்டு, முழு உருவமும் அவர்களின் கண்களுக்குப் படத்தான் போகிறது!

குழுவின் கோரிக்கையிலே உள்ள மரத்தன்மை, அச்சத்தை மூட்டி இருக்கிறது அதற்கு எனவேதான் 'அதிகாரம், அதிகாரம், அதுவும் டில்லிக்கு அதிகாரம்' என்று அங்கலாய்க்கிறது. இதே அச்சந்தான் மற்றவர்களையும் பிடித்து ஆட்டுகிறது! மக்கள் சீரழிகிறார்கள். சிலர் என்றும் போல் கொழுக்கிறார்கள்.

(10-ம்பக்கம் பார்க்க)

## 'கொலைகாரி'

2-ம் பக்கத் தொடர்ச்சி

களைக் கொன்றுளாம் — தற்கொலை செய்ய முயன்றுளாம்' – இவ்வாறு அலட்சியமாகக் கூறுவதோடு இருந்துவிட்டார். கேட்டவருக்கும், மற்ற அங்கத்தவர்களுக்கும் இது பரிதாபத்துக் குரியதாகவோ, பரபரப்பைத் தரக்கூடிய சம்பவமாகவோ படவில்லை. இந்த சர்க்காரிலே ஒரு பிரஜை, வறுமையால் அவதிப்படுவது, கொலைகாரியாக மாறுவது, ஆட்சியாளருக்குக் களங்கத்தை உண்டாக்கக்கூடியதாயிற்றே என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்கவில்லை. அலட்சியமாக மந்திரி கூறுகிறார்—அதுபற்றிக் கவலை தமக்கில்லை என்று அங்கத்தவர்கள், மாத முடிவை எதிர்நோக்கிக்கொண்டு இருக்கிறார்கள். இருந்தாலும், இது மக்கள் ஆட்சி, மறந்துவிடாதீர்கள்!

பச்சம்மாள் நீதிபதி நிலையில் இருந்தால், தன்னைக் கொலைகாரியாக மாற்றியசமுதாயத்தையும், தன்னைப் பற்றிக் கவலையற்று இருந்த சர்க்காரையும், தான் குற்றம் செய்த பின்னர் 'கொலைகாரி' என்று எள்ளிநகையாடிய சமுதாயத்தையும், தன்னைக் காப்பாற்ற வேண்டிய கடமை ஆளவந்தார்களுக்கு இருக்கிறது என்பதை உணர்த்தாது தண்டனை கொடுக்க மட்டும் சக்தியுடைய சட்டத்தையும், குற்றவாளிக் கூண்டில் அல்லவா கொண்டு வந்து நிறுத்தி இருப்பாள்? தனது மக்களைக் காக்க வழிவகுக்க வகையற்றசர்க்காருக்கு, மக்கள் அனைவருக்கும் பிழைப்பளிக்கும் பொறுப்பற்ற சர்க்காருக்கு, மக்களைத் தண்டிக்க மட்டும் உரிமை எங்கிருந்து வந்து விட்டது என்றல்லவா கேட்டிருப்பாள்? மக்கள் சர்க்கார் என்ற பெயர் பொருந்தாது இந்த சர்க்காருக்கு என்றல்லவா தீர்ப்பளித்திருப்பாள்?

'கொலை—களவு நாட்டில் தவிர்க்கப்படவேண்டுமானால், வறுமையை நாட்டை விட்டுத் துரத்தி அடியுங்கள். அப்பொழுதுதான் மக்கள், மக்கட் பண்புடன் வாழ்வார்கள். அதற்கான நல்லாட்சியை நாட்டில் நிறுவுங்கள்!' ஆளவந்தார்களுக்கு அவளிடும் கட்டளை-இல்லை-வேண்டுகோள்.

இந்த வழக்கு விபரம் 9—12—48 'மெயில்', பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

திராவிட நாடு

காஞ்சி] 19—12—48 [ஞாயிறு

# தயவு தாட்சண்ணியமின்றி....!

●

*நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு விட்டது.*

*கஷ்டத்தில் எல்லாரும் பங்கு கொள்ள வேண்டும்.*

*பாழான செலவுகள் எதுவும் நடக்காதபடி தடுக்கவேண்டும்.*

*எல்லா வகையிலும் சிக்கனம் கைக்கொள்ளப் படவேண்டும்.*

*மத்திய, மாகாண சர்க்கார்கள் தங்கள் செலவுகளைத் தயவுதாட்சண்ணியமின்றிக் குறைக்க வேண்டும்.*

*மக்கள், பொருள்களை மிகவும் குறைவாக உபயோகிக்கவேண்டும்.*

* * *

ஜெயப்பூர் காங்கிரஸ் மாநாட்டுக்கு முப்பது இலட்சம் ரூபாய்க்குமேல் செலவாகும்.

தற்பொழுது சாமான்கள் விற்கும் ஏற்ற விலையை எண்ணும்போது முப்பது இலட்சம் செலவாவது அதிகம் என்று கூற முடியாது.

ஜெயப்பூர் காங்கிரஸ் மாநாட்டுத்தலைவரை ஊர்வலமாக அழைத்துச் செல்வதற்கு ஒரு வெள்ளித் தேர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

சென்னையிலிருந்து இரண்டு தனி இரயில்களும் கல்கத்தாவிலிருந்து மூன்று தனி இரயில்களும் வேறுபல இடங்களிலிருந்துதனித் தனி இரயில்களும் ஜெயப்பூர் மாநாட்டுக்குச் செல்கின்றன.

மாநாட்டுப் பந்தலில் நடனங்கள், பாட்டுகள், கூத்துகள், கும்மிகள் நடத்தப் பல பகுதிகளிலிருந்தும் அந்தரங்கத் துறைகளில் வல்லுனர்கள் அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

* * *

நாம் தொடக்கத்தில் குறிப்பிட்டிருக்கும் வாசகங்கள், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியார், ஜெயப்பூர் மாநாட்டுக்கு அனுப்பியிருக்கும் தீர்மானங்களில் காணப்படும் சில முக்கிய குறிப்புகள்.

அடுத்த வரிசையில் உள்ள வாசகங்கள், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியாரால் ஜெயப்பூர் காங்கிரஸ் மாநாட்டுக்காகச் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகளில் சில.

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுவிட்டதென்ற தீர்மானத்தை அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டுக்கு அனுப்பிய கமிட்டியே முப்பது இலட்சம் ரூபாயிலிருந்து ஐம்பது இலட்சம் ரூபாய்வரை செலவிட்டு மாநாட்டை நடத்த ஏற்பாடு செய்திருக்கிறது.

கஷ்டத்தில் எல்லாரும் பங்கு கொள்ள வேண்டுமென்று யார் தீர்மானம் செய்தார்களோ, அவர்களே, தங்கள் தலைவரை ஊர்வலமாக அழைத்துச் செல்ல வெள்ளியாலான தேரை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

பாழான செலவுகள் எதுவும் நடக்காதபடி தடுக்கவேண்டு மென்று தீர்மானம் நிறைவேற்றியவர்களே, மாநாட்டுப் பந்தலில் நடனங்களும், பாட்டுகளும், கூத்துகளும், கும்மிகளும் நடத்த ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

எல்லா வகையிலும் சிக்கனம் கையாளப்படவேண்டுமென்று கூறுபவர்களே, தாங்கள் மட்டும் செல்வதற்குத் தனி இரயில் வண்டிகள் பலவற்றைப் பெருந்தொகைப் பொருட்செலவில் ஏற்பாடு செய்து மாநாட்டுக்குச் செல்கின்றனர்.

பொருளாதார நெருக்கடி, கஷ்டத்தில் பங்கு, பாழான செலவுகள், சிக்கனம் என்ற சொற்களுக்கும், மாநாட்டுச் செலவு முப்பது இலட்சம், வெள்ளித்தேர், தனி இரயில்கள், நடனம்—பாட்டு — கூத்து—கும்மி ஆகிய சொற்களுக்கும் இடையே காணப்படும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாட்டை அன்பர்கள் ஒப்புநோக்கிப்பார்த்துச், சொல்லுக்கும் செயலுக்கும் கடுகத்தனையாவது ஒற்றுமை இருக்கிறதா என்பதனையும், இப்படிப்பட்டவர்களால் நாட்டுமக்களின் கஷ்ட நஷ்டங்கள், குறைகள் கொந்தளிப்புகள் தீர்க்கப்படுமா என்பதனையும்—பொதுவாக அனைவரும் சிறப்பாகக் காங்கிரஸ் தோழர்களும் எண்ணிப் பார்க்கவேண்டுமென்பதற்காகவே இவற்றை இங்கு எழுதுகிறோம்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு விட்டதென்பதை உணர்ந்து, அதற்கேற்பச் செலவினங்களைக் குறைக்கவேண்டுமென்று புத்தியும் யோசனையும் கூறவும், சர்க்காருக்குக் கட்டளை பிறப்பிக்கவுமான அளவுக்குத் தன்பலத்தை வளர்த்துக்கொண்டுள்ள காங்கிரஸ் காரியக்கமிட்டி, வெள்ளையர் வெளியேறிய பின்னர் அகில இந்திய காங்கிரஸ் மாநாடு என்ற ஒன்றைக் கூட்டவேண்டிய அவசியமில்லாதபடி, கோரிய சுதந்திரத்தைப் பெற்று, பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காக்கும் பெரும் பணியை மேற்கொள்ளவேண்டிய காரியக் கமிட்டி, பல இலட்சத்தைப் பாழாக்கும் முறையில் ஒரு மாநாட்டை நடத்துவது முறையா—தேவையபயனுள்ளதா என்பதனை எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம்.

சுதந்திரம் கிடைத்துவிட்டது. கிடைத்த சுதந்திரத்தைச், சுதந்திரப் போர் முன்னணித் தலைவர்களே பொறுப்பேற்றும் நடத்துகிறார்கள். இந்த நிலைமையில், சுதந்திரம் பெறுவது ஒன்றையே அடிப்படையாக வைத்து அமைக்கப்பட்ட காங்கிரஸ் மாசபை, சுதந்திரம் பெறுவதற்காகவே பல மாடுகள் கூட்டி மக்களுக்குச் சுதந்திர உணர்ச்சியையும் அதனைப் பெறும் உற்சாகத்தையும் ஊட்டிய காங்கிரஸ் மாசபை, இப்பொழுது ஏன் ஒரு மாநாடு கூட்டவேண்டும்? முன்னர், அந்நிய ஆங்கிலரை ஓட்டுவதென்ற அடிப்படையில் பற்பல மாநாடுகளைக் கூட்டிய காங்கிரஸ் மாசபை, இப்பொழுது யாரை ஓட்டுவதென்ற அடிப்படையில் மாநாட்டைக் கூட்டுகிறது?

காங்கிரஸ் மாசபையின் அடிப்படை இப்போது மாற்றப்பட்டு விட்டது. இப்போது அதன் நோக்கம் யாரையும் ஓட்டுவது என்பதல்ல, இந்நாட்டிலுள்ள அனைவரையும் ஒன்றுபடுத்துவதே இன்றைய காங்கிரஸ் மாசபையின் அடிப்படை. அந்த அடிப்படையிலேயே இன்

றைய காங்கிரஸ் மாசபை மாநாடு கூட்டியிருக்கிறது. அல்லது, சுதந்திரம் பெறுவதற்காகப் பாடுபட்டோம். அது கிடைத்துவிட்டது. என்ற போதிலும், நாட்டில், கிடைத்த சுதந்திரத்தில் பங்கு கொண்டு இந்திய யூனியனோடு இணைந்து வாழ மறுக்கும் கட்சிகள் பல இருப்பதால் அக்கட்சிகளின் குறைகளை அறிந்து அவற்றிற்கேற்ற பரிகாரங்களைத் தேடுவதே இம்மாநாட்டின் அடிப்படை நோக்கம் என்ற முறையிலாவது மாநாடு கூட்டப்பட்டிருக்கிறது என்று கூறுவதற்கும் இடம் இல்லாத முறையிலன்றோ மாநாடு கூட்டப்பட்டிருக்கிறது.

திராவிடர் கழகத்தாரால் நடத்தப்படும் இந்தி எதிர்ப்பு மறியலை ஒட்டிய கூட்டங்களுக்குத் தடையுத்தரவு (144) பிறப்பித்துவிட்டல்லவோ அவசர அவசரமாகத் தனி இரயில் அமர்த்திக்கொண்டு சென்னை அமைச்சர்களும் காங்கிரஸ் தலைவர்களும் ஜெயப்பூர் மாநாட்டுக்குச் சென்றிருக்கின்றனர்!

கும்பகோணம், திருவாரூர், நன்னிலம், கோவில்பட்டி, திருக்கோயிலூர் முதலான இடங்களில் திராவிடர் கழகத்தார்மீது தடையும், நடவடிக்கையும் எடுக்குமளவுக்கு உள்ள அதிகார பலத்தை மேலும் வளர்ப்பதற்கான திட்டங்களை வகுப்பதற்குத்தானே ஜெயப்பூர் மாநாடு பயன்படப்போகிறது என்ற எண்ணம் நமக்கு ஏற்படாமல் இருக்க முடியுமா?

இத்தகைய அடக்கு முறைகளை அணைத்து நாட்டை ஆளும் போக்கில் இருக்கிறது இன்றைய சுதந்திர ஆட்சிமுறை—அதற்காகவே இலட்சக்கணை, பொதுப்பணத்தை பாழாக்கி மாநாடு கூட்டியிருக்கிறது காங்கிரஸ் மாசபை என்பதைப் பொதுமக்களுக்கு எடுத்துக் கூறாமல் எப்படி இருக்க முடியும்?

நாம் எண்ணினோம், ஜெயப்பூரில் கூடும் மாநாடு, காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானித்தபடி பாழான செலவுகளைக் குறைப்பதற்கு வேண்டிய திட்டங்களை வகுக்கும் என்று. ஆனால், அவர்களால் கூட்டப்படும் மாநாடே பல இலட்சம் தொகையைப் பாழாக்குவதாக இருக்கிறது!

இந்த இலட்சணத்தில்,

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு விட்டதாம்!

கஷ்டத்தில் எல்லாரும் பங்கு கொள்ள வேண்டுமாம்!

பாழான செலவுகள் தடுக்கப்பட வேண்டுமாம்!

சிக்கனம் தேவையாம்!

எப்படி இருக்கிறது உபதேசம்!

“மத்திய மாகாண சர்க்கார்கள் தங்கள் செலவுகளைத் தயவுதாட்சண்ணியமின்றிக் குறைக்க வேண்டும்” என்று தீர்மானமூலம் சர்க்காருக்கு உபதேசம் செய்யும் காங்கிரஸ் காரியக்கமிட்டி, தன்னால் கூட்டப்படும் மாநாட்டுக்கு இலட்சக்கணக்கான பணத்தைச் செலவு செய்கிறதே! இது நியாயமா? முறையா? என்பது ஒருபுறம் இருக்கட்டும்.

ஏழ்மையின் சிகரம், வறுமையின் உறைவிடம் என்று சொல்லப்படும் ஒருநாட்டின் கவர்னர் ஜெனரலின் மாதச் சம்பளம்,

இருபத்தோராயிரம்! வேறு பல மேற்செலவுகளுக்காக மேலும் பலப்பல ஆயிரம்!

வெளிநாடுகளில் இருக்கும் தூதுவர்களுக்கு,

பன்னீராயிரம், எண்ணாயிரம், ஆறாயிரம்! அதோடு கார் இரண்டு, மூன்று, ஒன்பது ஒவ்வொருவருக்கும்!

இந்திய யூனியன் முதல்வரின் சம்பளம்,

மூவாயிரம், படிச்செலவு வேறு!

மாகாண அமைச்சர்களுக்கு,

ஆயிரத்தைந்நூறு! படிச் செலவு வேறு!

சட்டசபை உறுப்பினர்களுக்கு,

நூற்றைம்பது! படிச்செலவுவேறு!

ஏன்? என்றுகேட்டதா காங்கிரஸ் காரியக்கமிட்டி? மத்திய, மாகாண சர்க்கார்கள் தயவுதாட்சண்ணியமின்றிச்செலவுகளைக் குறைக்க வேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கும் காங்கிரஸ் காரியக்கமிட்டி, ஏனோ இந்த விஷயத்தில்மட்டும் தன்னுடைய தயவையும் தாட்சண்ணியத்தையும் தங்கு தடையின்றிக் காட்டியிருக்கிறது என்பதுதான் விளங்கவில்லை. மத்திய, மாகாண சர்க்கார்கள் தங்கள் செலவினங்களைக் குறைக்க வேண்டுமென்று முடிவு கட்டிய தீர்மானத்தில், மேலே நாம் குறிப்பிட்டுள்ள செலவினங்களைக் குறைக்க வேண்டுமென்ற ஒரு குறிப்பையும் சேர்த்திருந்தால், அது, உண்மையாகவே நாட்டின்பொருளாதார நெருக்கடியை உணர்ந்துதான், அந்நிலை மாறவேண்டுமென்பதற்காகப் பாடுபடுகின்றதென்றுகருதலாம். ஆனால், காங்கிரஸ்காரியக்கமிட்டி அந்தவேலையில் ஈடுபடவில்லை. அதாவது உண்மையான பொருளாதார நெருக்கடியைப்போக்கவேண்டுமென்ற நல்லெண்ணம் அதற்குக் கிடையாது. மந்திரிகளும், தூதுவர்களும் பெறுகின்ற சம்பளமும் படிச்செலவும் போதாது, இன்னும் அதிகமாகத் தரப்பட வேண்டும் என்று அண்மையில் சென்னை மந்திரிகள் ஒரு வேண்டுகோள் விட்டனர். அதாவது, விருந்து வைபவங்கள் அடிக்கடி நடத்தவேண்டியிருப்பதால், தங்களுக்குக் கிடைக்கும் பணம் போதவில்லை யென்றும் மேலும் நானூறு ரூபாய் அதிகமாகத்தரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

காங்கிரஸ் காரியக் கமிட்டி, தயவு தாட்சண்ணியமின்றி மத்திய மாகாண சர்க்கார்கள் தங்கள் செலவுகளைக் குறைக்கவேண்டுமென்றுகூறுகிறது. ஆனால், மாகாண அமைச்சர்கள் தங்களுக்குத் தரப்படும் சம்பளம் போதவில்லை—விருந்து நடத்தவேண்டியிருக்கிறது, எனவே சர்க்கார் தயவு தாட்சண்ணியம் பாராமல் சம்பளத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்கிறது எப்படி இருக்கிறது சுதந்திர ஆட்சி முறையின் போக்கு! இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், செலவினங்களைக் குறைக்கவேண்டுமென்று தீர்மானம் செய்கின்ற கமிட்டியிலே, செலவுக்குப்போதியதாக இல்லை இப்பொழுது கிடைக்கும் சம்பளம், எனவே இன்னும் அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்கும் அமைச்சர்களும் இருக்கிறார்கள். காரியக் கமிட்டியில் கலந்து கொள்ளும் போது அவர்களுக்கு நாட்டின் பொருளாதார நெருக்கடியும், செலவினங்களைக் குறைக்க வேண்டுமென்ற எண்ணமும் உண்டாகிறது. பின்னர், காரியக் கமிட்டியின் நடவடிக்கைகளை முடித்துக்கொண்டு வந்து மந்திரிப் பீடத்தில் அமர்ந்தவுடன், தாங்கள் நடத்தும் விருந்து வைபவங்களுக்குப் போதிய பணம் இல்லாத ‘சொந்தப் பொருளாதார’ நெருக்கடியும், அதனைப் போக்கச் சர்க்கார் இன்னும் அதிகமாகச் சம்பளம் தரவேண்டுமென்பதும் புலனாகின்றது.

காரியக் கமிட்டியிலே கண்முன் தோன்றும் நாட்டின் பொதுவான பொருளாதார நெருக்கடி, மந்திரிப் பீடத்தில் அமர்ந்து, வருபவர்கள் போபவர்களுக்குச் செய்யப்படும் விருந்தின்போது மறைந்து, தங்களின் சொந்தப் பொருளாதார நெருக்கடியே அவர்கள் கண்முன் தோன்றிக் கருத்தைக் குழப்ப வைத்து விடுகிறதுமன்றி, வாய் திறந்து கேட்கவுஞ் செய்துவிடுகின்றது, எங்களுக்குச் சம்பளம் போதவில்லை, அதிகம் தரவேண்டுமென்று!

இப்படிப்பட்ட அரசியலறிவும், நாட்டின் நிலையை உணர்ந்து அதற்கேற்பக் காரியங்களை நடத்திச் செல்ல வேண்டுமென்ற 'பரந்த' நோக்கமும் கொண்டவர்கள்தான் கூறுகிறார்கள், எல்லாவகையிலும் சிக்கனம் கையாளப்பட வேண்டும் — தயவு தாட்சண்ணியமின்றிச் செலவினங்களைக் குறைக்கவேண்டும் என்று. எப்படி இருக்கிறது இவர்களின் தயவு தாட்சண்ணியம்!

## அதோ நமது லட்சியபூமி

7-ம் பக்கத் தொடர்ச்சி

மொழிவழி மாகாணம்கேட்போர் வெளிப்படையாகக் கூறுகின்றபொழுது, மக்களிடம் பரிவுகொண்டுதன் அவ்வாறு பேசுவதுபோல் தோன்றுகிறது. ஏதோ நன்மைகள் பல, நாட்டுக்கு ஏற்படுத்த முடியும் என்றும் குறிப்பிடுகிறார்கள். எடுத்துக்காட்டாக தோழர் S. V. இராமமூர்த்தி (I C S.) கூறுவதைப் படியுங்கள்.

ஆந்திர மாகாணத்தின் செல்வ வளத்தைக் குறிப்பிடும் பொழுது, கோதாவரியும் கிருஷ்ணாவும், துங்கபத்திரையும் பெண்ணாறும் பாயும் நிலப்பரப்பே, பூகோள அமைப்புப்படி ஆந்திர நாடாகும் என்றும், துங்கபத்திரா அணைக்கட்டும், இராமபாதசாகர் தேக்கமும் நிறைவேறி விடுமானால், பாய்ச்சலுக்கும் —மின்சார உற்பத்திக்கும்-தொழில் வளர்ச்சிக்கும்—விவசாய முன்னேற்றத்திற்கும்—வழி ஏற்பட்டுவிடும் என்றும், இவ்வளவையும் செயலில் கொண்டு வருவதற்கு ஒரு நல்ல நிர்வாக அமைப்பு இருக்கவேண்டியது அவசியமென்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர், கிடைக்கும் மின்சாரத்தின் உதவியால் கனிப்பொருட்களையும், காட்டுச் செல்வத்தையும் பெருக்கிக் கொள்ள முடியுமென்றும் பேசி இருக்கிறார்.

செல்வச் சிறப்புற்று, வறுமையற்ற நாடாக ஆந்திரம் இருக்கக் கூடாது என்று எண்ணும் தமிழர்கள் எவரும் இங்கில்லை. தமிழர் பகுதியிலும் மண்ணில் மறைந்து கிடக்கும் செல்வத்தை, மக்கள் கண்முன் கொண்டுவந்து கொட்டினவர்கள் இதுவரை எவரும் இல்லை. செல்வச்சிறப்பிழந்து, சீர்குலைந்து ஆந்திரர் அவதிப்பட்டுக்கொண்டிருப்பது போலத்தான், தமிழரும் சொந்த நாட்டில் பிறருக்கு அடிமையாகி, கடல்கடந்து சென்றநாட்டிலும் நலிவடைந்து, துக்கத்தைத் துடைக்க வகையறியாது விழித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஏமாற்றமும்—எரிச்சலும்— இல்லாமையும்-பொதுவாக இருக்கிறது இருசாராருக்கும். எந்த மொழிபேசினாலும் திராவிடர் அனைவரின் நிலையும் இதுதான் இன்று.

இராமபாத சாகர் தேக்கத்திற்கு, டில்லிக்குக் காவடிதூக்கிச் சென்றுவிட்டு வந்தபின்னரும், ஆந்திரம் தனியானால், அதிகாரம் இல்லாத அரசு அமைத்து விட்டால், ஏதேதோ நன்மைகள் நிரம்பிய நாடாக ஆந்திரம் ஆகிவிடும் என்று, இராம மூர்த்தியார் பேசுவது, சிரிப்புக்கிடமானதாக இருக்கிறது!

கோவையிலே கிளம்பும் ஆலைகளின் புகை, ஆந்திரர் சிலரின் கண்களைக் கரிக்கச் செய்கிறது. மேட்டூர் அணைக்கட்டு சிலருக்கு மிரட்சியை உண்டு பண்ணுகிறது. சென்னை நகரிலுள்ள மருத்துவக் கல்லூரி சிலருக்குக் கோபத்தைக் கிளறுகிறது. ஆந்திரர் தந்த வரிப்பணத்தால் தமிழர் பெற்ற வாழ்வு இவை என்று எண்ணி ஆத்திரம் கொள்ளுகிறார்கள் அவர்கள். பிரிந்து சென்றால், இவ்வளவு ஆந்திரத்தில் ஏற்படுத்தலாமே என்ற அவர்களின் ஆசை தனி மாகாணக் கோரிக்கையாக உருவாகி இருக்கிறது.

பானகல் அரசருக்கு பிரதமர் பட்டம் சூட்டினோம், பகைபோகவில்லை. முனிசாமி நாயுடுவிற்கு முடிபுனைந்தோம், மூண்டகோபம் தணியவில்லை. முடிவில் பொப்பிலி அரசருக்குப் பதவிதந்தோம், பயனேற்படவில்லை. காங்கிரசிலே பிரகாசம் பந்துலு பிரதமராகியும் 'பிரிவினை' பேச்சு மடியவில்லை. கலியுக ஜனகர்ரயணரின் சீடர் முடியைச் சுமந்து கொண்டிருக்கும் இதுகாலையும், தீ அணையாது முன்னிலும் அதிகமாக மூண்டுவிட்டிருக்கிறது!

பலம்பொருந்திய மத்தியசர்க்கார் டில்லியில் விஸ்வரூபக்காட்சி அளித்துக்கொண்டிருக்கும் பொழுது, திறமையான நிர்வாகத்தை ஏற்படுத்தத் தனி மாகாணம் வேண்டுமென்று பேசுவது வேடிக்கையாகத்தான் இருக்கிறது. திறமையாக நிர்வகிக்க வேண்டிய, கொழுத்த வரி தரும் இனங்கள் பலவற்றையும் டில்லியில் குவித்துவிட்டு, விஜயவாடாவிலோ வேறு இடத்திலோ பெயரளவிற்கு ஒரு அரசாங்கத்தை அமைத்து விடுவதால் மட்டும் விளையப்போகும் நன்மைதான் என்னவோ?

* * *

உலகத்திலுள்ள தலைசிறந்த இரும்புத்தொழிற்சாலைகளில் சிறந்த ஒன்றை சொந்தமாகக்கொண்டுள்ள டாடா, செருப்பாணி முதல் புகைவண்டிவரையில் உற்பத்திச் செய்யும் ஆற்றல் பெற்றுள்ள டாடா, ஆந்திரத்தில் மட்டுமல்ல—நாட்டின் வேறு எந்தப் பகுதியிலாவது, போட்டி கிளம்புவதைப் பார்க்கச் சகிப்பாரா? முளையிலேயே கிள்ளி எறிய முயற்சி எடுத்துக்கொள்ளமாட்டாரா?

நெசவாலை அரசர் பிர்லா, அனைவருக்கும் துணி வேண்டிய அளவு—அனைவரும் வாங்கிக் கட்டக்கூடிய விலையில் கிடைக்கவில்லை என்று புலம்பிக்கொண்டு இருக்கும்பொழுதே, அதிக உற்பத்தியாகிவிட்டது, சரக்கு விற்காமல் தேங்கிக்கிடக்கிறது, வெளிநாட்டில் சந்தை தேட வேண்டும், என்று பிரலபித்துக்கொண்டு இருக்கும்பொழுது, நாட்டின் பிறபகுதிகளிலே புதிய ஆலைகள் கிளம்பி, மேலும் போட்டியிட்டு, விலையிலே வீழ்ச்சி ஏற்பட்டு, வருவாயிலேமண் விழுவதை விரும்புவாரா? அவர் எதிர்ப்பையும் மீறிப் புதிய ஆலைகள் ஏற்படுத்தி வளத்தைப் பெருக்குவதாக இருந்தாலும், பிர்லாவின் போட்டியைப் புதிய தொழிற்சாலைகளால் தாங்கமுடியுமா? அந்நிலையில், போட்ட முதலுக்கும் குறைவாக, ஆலைகளைப் பிர்லாவிற்கு விற்றாலன்றி, வந்த வேதனையைப் போக்கிக் கொள்ள வழி ஏற்படாதே!

டாட்டாவும், பிர்லாவும், மற்றுமுள்ள பணியாக்களும், ஆந்திரரின் செல்வத்தைக் சடத்திக் கொண்டு போகும்பொழுதுதான், அதன் விளைவாக ஆந்திரம் வளமிருந்தும் வரண்டபூமியாகக் காட்சியளிக்கின்ற பொழுதுதான், இந்தத்துன்பத்தைத்துடைக்க, ஆந்திரமாகாணம் அல்ல மருந்து, வேறு இருக்கிறது வழி. அதுவே திராவிடநாடு அமைத்தல் என்னும் உயர்ந்தகொள்கை, ஆந்திரர் உள்ளத்திலே இடம்பெறும்.

ஆந்திரர்கள் ரோஷக்காரர்கள், வீரம் செறிந்தவர்கள் என்றெல்லாம் கேட்டிருக்கிறோம். ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும் மறந்து, எங்கோ இரண்டொருவளம்—அதுவும் இருக்கவேண்டியதற்குக் குறைவாக இருக்கும் நிலையில்—தமிழர்கள் மீது ஆத்திரப்படுகிறவர்கள், தங்கள் ஆந்திரம் மார்வாடியின் மார்க்கட்டாக இருப்பதைக்காண நேர்ந்தால், அதிலிருந்து விமோசனம் பெற வழி தேடாமலா இருப்பார்கள்? 'வடநாட்டு மெல்லிய ஆடையைக் காட்டிலும் உள்நாட்டுக் கோணியையுடுத்தலாம்' என்னும் முடிவிற்கு வரத்தானே செய்வார்கள்? 'மணல் சர்க்கரையைக் காட்டிலும் உள்நாட்டு வெல்லம் போதும்' என்றல்லவோ தீர்மானிப்பார்கள்?

இத்தகு நிலையில், இன்று தவறாக வேற்றுமைப்பட்டிருப்போர், ஒன்றுபடும் நிலை ஏற்படாமல் இருக்கமுடியுமா? வடநாட்டில் உள்ள சிலரின் சுரண்டலுக்குத்தான், டில்லி, சர்வாதிகாரக்கோட்டையாக விளங்குகிறது என்னும் உண்மையை உணர்ந்துகொள்ளமாட்டார்களா? இந்த உண்மையை எவ்வளவு காலத்திற்குத்தான் மக்கள் கண்களுக்கும் கருத்துக்கும் படாமல் மறைத்துவைத்திருக்க முடியும்? பலம் பொருந்திய இந்தியயூனியன் என்று பேசுகின்ற அதே மூச்சில்தான், பிரிவினை வேண்டும்' என்றும் பிரலாபிக்கிறார்கள். இவர்கள் அனைவரும், பலம் என்னும் வார்த்தைக்குக் கொண்டிருக்கும் பொருளும்—கொடுக்கும் பொருளும் — வெளியிடும் பொருளும் வெவ்வேறாகவே இருக்கிறது. இதிலும் ஒற்றுமை இல்லை. டில்லியில் அரியாசனத்தில் அமர்ந்திருக்கும் காங்கிரஸ் மேலிடம், பலம் பொருந்திய இந்திய யூனியன் என்று கற்பனை செய்து கொண்டிருக்கும் அமைப்புக்கும், பிரிவினை வேண்டுவோர் உள்ளத்தின் ஆழத்தில் புதைந்து கிடக்கும் அமைப்புக்கும், இருக்கும் ஒற்றுமையைக் காட்டிலும் வேற்றுமை தான் அதிகமாக இருக்கிறது. இந்தமுரண்பாடு, வெளியுலகுக்கு விளக்கமாகத் தெரியவில்லையேயன்றி, அவர்களுக்குள்ளாக ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. பிரிக்கப்பட வேண்டும் என்னும் பேச்சு வலுக்க வலுக்க, பிரிப்பது கூடாது என்னும் பேச்சு முன்னிலும் பலமாகக் கேட்கிறது. பிரிவினைக் கோரிக்கையைத் தகர்த்துவிடலாம் என்ற உறுதியான நம்பிக்கையோடு, கூடாது என்று கிளம்பும் எதிர்க்கூச்சல், அது எந்த அளவிற்கு அதிகரித்திருக்கிறதோ, அதைக் காட்டிலும் அதிகமாக, பிரிவினை வேண்டுவோர் உள்ளத்தில் அவநம்பிக்கையையும் — ஏமாற்றத்தையும்—எரிச்சலையும்-எதிர்ப்பையும் தோற்றுவிக்கிறது பிரிவினை கோரிக்கைக்கும் ஆக்கமளித்திருக்கிறது. குழுவின் அறிக்கை இதனைத் துரிதப்படுத்துகிறது.

விடுதலைப் பணியில் ஒன்றுபட்ட நோக்குடன் பணியாற்றிய 'உத்தமர்கள்', விடுதலை கிடைத்த பின்னர், வெவ்வேறு மனத்தினராகி, — பிரிவினை வேண்டவும் — மறுக்கவும்—ஆன மனநிலை பெற்றுவிட்டதற்குக் காரணந்தான் என்ன? விடுதலை வீரர்களிடையே வெள்ளை மனத்தினர் என்று சொல்லப்பட்டவர்களிடை, ஏதோ ஒரு கள்ளச் சிந்தை—அனைவரும் விளக்கமாகத் தெரிந்துகொள்ள முடியாத உருவில் — வளர்ந்து வருகிறது என்பது மட்டும், அவர்களிடை ஏற்பட்டுள்ள குழப்பமும், பேச்சும், படம்பிடித்துக் காட்டுவதாக இல்லையா என்று கேட்கிறோம். தங்களை நீங்கிய பிறரின் ஆதிக்கம், தங்களுக்கு முடிவில் கேடாக முடியும் என்னும் அச்சம், பிறர்கையில் சிக்கிய அதிகாரம் தங்களுக்கு நலம் பயக்காது என்னும் சந்தேகம், விடுதலை வீரர்களிடை, இனி என்றும் நேர் செய்ய முடியாத அளவில் நிரம்பிவிட்டப்பதை எவராலும் மறுத்துவிடவோ-மறந்துவிடவோ முடியாது. நார் அறிக்கை இதற்கு எடுத்துக்காட்டு! இந்த நிலை கண்டு மக்கள் சோகிக்கின்றனர், சுகவாழ்வு பெறுவதற்கு வழிவகை தெரியாமல்!

இந்தப் போராட்டத்தில் வெற்றி எவருக்குக் கிடைக்கும் என்பது அல்ல நாம் கவனிக்கவேண்டியது. 'பிரிவினை' எண்ணம்பேசும்நிலைமாறி, செயலில் இறங்கும் தன்மை பெற்றிருக்கிறது என்பதுதான் முக்கியம். ஏக இந்தியா என்னும் கொள்கையால், 'பிரிவினைக் கோரிக்கையைத் தகர்த்துவிட முடியாது — முடியவில்லை அதற்குச் சக்தி அதிகம்; தேசிய சக்தியைக் காட்டிலும் பன்மடங்கு வன்மையுடையது. ஆரம்பத்திலேயே இதனை அழிக்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். வளரவிட்டு விட்டால், விபரீத விளைவுதரும் முறையில், வளர்ச்சி பெற்றுவிடும். இவ்வாறு தார் கவலை கொண்டு, விதவிதமான அடக்குமுறைகளை வீசவேண்டிய அளவிற்கு அளவுகடந்த அதிகாரம் ஒரே இடத்தில் - அதுவும் டில்லியில் — குவிந்திருக்க வேண்டும், என்று முடுக்காக முகாரி பாடுகிறார்! நன்மொழி, துணைத் தேசிய உணர்வை ஒடுக்குவதற்குப் போதாது. கலந்து பேசுவதால், கருத்தைக் குலைக்க


# சகிப்புவேண்டும்

## சமூகத்தில்

தோழர் கி. ஆர். பே. விசுவநாதன் அவர்களின்
ஆராய்ச்சிச் சித்திரம்.
விலை அணா ஐந்து. கழிவு 0—1—0
முன்பணத்துடன் விற்பனையாளர்கள் தேவை.

விபரங்கட்கு:—

கதம்பம் நிலையம்.
காரைக்கால்.
(French India)

முடியாது. ஆத்ம சக்தி, இதற்குப் பயன்படாது! அதுவும், அது அதிகாரத்தில் இல்லாதபோது பேச வேண்டிய அலங்காரச் சொல்! அதிகாரம் — அதிகாரம் — அதுதான் நமக்கு அருந்துணை. அதனைப் பெறுவதே நமது முதற் பணி. தாரின் தர்மோபதேசம் இவை!

இந்தச் சூழ்நிலை, காலஞ் செல்லச் செல்ல, கண் முன்னர் தினம் தினம் காணும் வேதனை தரும் சம்பவங்களால், பல மடங்கு, எதிர்பார்ப்பதற்கு அதிகமாக வலுவடையும்; சாதாரண மக்களும் உள்ள நிலையை உணர்ந்துகொள்ளும் ஆற்றலும் அறிவும் பெறுவர்.

* * *

அசோகர் தோற்றார்–அக்பர் வெற்றி காணவில்லை-வெள்ளையர்களால்உருவாக்கமுடியவில்லை-ஆத்ம பலத்தால் அழிக்கமுடியவில்லை–வெறும் அதிகாரத்தால் அழித்துவிடலாம் என்று, காங்கிரஸ் மேலிடம் நினைப்பது போலவே, தார் குழுவும் உறுதியாக நம்புகிறது. திராவிடம் அடிமையானதில்லை–அழிந்ததில்லை; ஆனால் நலிந்ததுண்டு. மீண்டும் தலைதூக்கும் பண்போடு என்றும் இருந்து வருவது. வரலாறு இதற்குச் சான்று கூறுகிறது. தார்குழு, இதனைக் கண்டு மிரளுகிறது. மாய்த்துவிடலாம் என்று யோசனை கூறுகிறது. பலம் பொருந்திய மத்திய சர்க்கார் அமைப்பை அதற்கான ஆயுதம் என்று நம்புகிறது.

பலமிருந்த மத்திய அரசாலும், அதிகாரமில்லாத அரசாவது மொழிவழி அமையவேண்டும் என்று கேட்டபோரிடத்திலும், தார் குழுவினர் முடிவு, எதனைக் காப்பதற்கு இணையற்றது என்று கூறப்பட்டதோ அதே மத்திய அரசை, மறுக்கவும், வெறுக்கவும், எதிர்த்துப் போராடவுமான எண்ணத்தைவிதைத்து விட்டிருக்கிறது. தங்கள் கோரிக்கை நிறைவேற, தங்களைப் போன்றே நியாயமான குறைபாடு உடையவர்களை ஒன்றுசேர்க்கவும், அவ்வகையில் ஒரு எதிர்ப்பு முன்னணி அமைக்கவுமான நிலையை, தமக்குத் தெரியாமலே, வலியதேடிக் கொடுத்திருக்கிறது. தார் குழு அறிக்கையின் அடிப்படையில்மறைந்திருப்பதைப் பாருங்கள். எதற்காக, எல்லோர் மீதும், இந்திய தேசியத்திற்கு, சந்தேகம்ஏற்பட்டிருக்கிறதோ, அதேகாரணத்திற்காகத்தான், மற்ற வட்டாரத்தினரும், இந்திய தேசியத்தைச் சந்தேகிக்கிறார்கள். அதன் விளைவாக ஆக்கம் பெற்றதுதான், பிரிவினை எண்ணம். அந்த எண்ணத்திலே, தார் காண்கிறார் — தமது சகாக்கள் போலவே — நமது இலட்சிய பூமியை. நடுக்கத்தைக் கொடுக்கிறது அது.

அவர் கண்களுக்குப் புலனாகிற பொழுது, ஒரே இனவழி வந்த மக்களுக்கு—ஒரே மொழிவழி பிறந்த மொழிகளைக் கொண்டுள்ள மக்களுக்கு, நமது இலட்சிய பூமியின்-முழுத் தோற்றமில்லையாயினும்—அதன் சிறு அளவாவது, தெரியத்தானே செய்யும். இன்றில்லாத நெருக்கப்—கூட்டுறவு—நட்புமுறையில், தம்மிச்சையாக–திராவிட மக்களிடை ஏற்படும் நிலை பிறக்காமல் இருக்க முடியுமா?

மொழிவழி மாகாணம்அமைக்கப்படுவது, ஏகாதிபத்தியத்தினிடமிருந்து விடுதலைப்பெறுவதைக் காட்டிலும், கடுமையான போராட்டத்திற்குப்பின்னரே கைவல்லியமாகக்கூடியதாக ஆக்கப்பட்டிருக்கிறது. அவ்வளவு கஷ்ட நஷ்டத்திற்குப் பின்னர் அமைக்கப்படும் அரசும், நினைத்ததை நிறைவேற்றும் ஆற்றலுள்ள அரசாக இருக்கப்போவதில்லை. ஆதலால், ஆரம்பத்திலேயே இலட்சிய விரிவு ஏற்படவும், புதிய சக்திகளை ஒருமுகமாக ஒன்று திரட்டவும், போருக்குப் புதிய அணி அமைக்கவும் ஆன விருப்பம் எவருக்கும் ஏற்பட்டே தீரும். அதில்தான் நமது இலட்சிய பூமிக்கான வெற்றிப்பாதை அமைந்திருக்கிறது. இதுவரை, நாம் நினைத்தபடி, நமது இலட்சியத்தை அடைய அதிக காலம் காத்திருக்கத் தேவை இல்லை. அதற்குத் தேவைப்படும் அளவிற்கு — ஏன் — அதற்கு மேலும் பலம் நம்மை நாடி வருகிறது. வெல்க திராவிடம்!

* * *

காங்கிரசிலே முக்கியமானவர், கதர் நிர்வாகத்தில் தலை சிறந்தவர், சென்னை சட்டசபை அங்கத்தவர், என். எஸ். வரதாச்சாரியார் கூறுகிறார் ஒரு வழி. அது இது:—

‘பாஷாவாரியாகப் பிரிப்பதைக் காட்டிலும் பொருளாதாரத்தையும் பூகோள அமைப்பையும் ஆதாரமாகக்கொண்டு நல்ல முறையில் இந்தியாவைப் பிரிக்கலாம்”

(தினமணி 21—11—48)

ஆந்திர சர்வகலாசாலைக்கு பல்லாண்டுகூறிய அரவிந்தரும், நல்ல தேசியவளர்ச்சிக்கு திராவிட மாவட்டமும், மராட்டியமண்டலமும் இன்றியமையாதது என்று கூறி இருப்பதும், நமது இலட்சியத்திற்கு அரண் செய்வதாகும்.


# வரவேற்பு

“இரணியன் அல்லது இணையற்ற வீரன்”

என்ற

நாடகத்தின் தடையை மீறி நடித்துச் சிறை புகுந்து

திரும்பும் தோழர்களுக்கு 22—12—48-ல்

**வேலூரில், பெரியார்** முன்னிலையிலும்

23—12—48-ல் **திருவத்திபுரத்திலும்**

25—12—48-ல்

**காஞ்சிபுரத்தில், தோழர் அண்ணாத்துரை**

முன்னிலையிலும் வரவேற்புகள் அளிக்கப்படும்

## பிஸ்மார்க் வருகிறார்!

4-ம் பக்கத் தொடர்ச்சி

வொரு மாகாணத்தாரும் ஒவ்வொரு தாய்மொழியைப் போற்றிப்புகழ்ந்து கொண்டும், பற்றுக்காட்டிக் கொண்டும் இருந்தால், இந்தியா என்ற ஒருமை உணர்ச்சியும் கட்டுப்பாடும் இராது. ஆகவே மாகாண மொழிப் பற்றினை விட்டுவிடவேண்டும், இந்தியை ஏற்றுக்கொள்ளவேண்டும்—ஒரு நாடு ஒரு மொழி என்றாகவேண்டும என்று பேசுகிறார்கள். பேசுகிறார்கள் என்றுமட்டும் குறிப்பிடுவது போதாது — ஏசுகிறார்கள் என்றுரைக்க வேண்டும் — நிலைமை அவ்வளவு வளர்ந்திருக்கிறது.

முன்ஷி, "பொது உடைமையை எப்படி ஒழித்தாகவேண்டுமோ, அது போல, மொழி மோகத்தையும் ஒழித்தாக வேண்டும் என்று கூறுகிறார். LINGUISM—மொழிமோகம் கூடாது என்று பேசுகிறார், முன்ஷி மூலதேவதைகளில் ஒருவர்—ஆட்சிப்பீடத்தில் முக்கியமானவர். அவர் வேண்டுமானால், சற்று அவசரப்பட்டுக் கூறிவிட்டார் என்று கூறலாமே தவிர, அவர் கூறியதுதான் எதிர்காலத்தின் போக்காக மற்ற வடநாட்டுத் தலைவர்கள் தீட்டி இருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது.

இந்தி, இதமாக, முதலில்! இந்தி, இலாப நோக்கத்துடன் பிறகு! இந்தி, இறுமாப்புடன் இறுதியில்!

தமிழ், இந்தி—முதலில்! இந்தி-தமிழ்! பிறகு! இந்தி மட்டும்! இறுதியில்!! இதுதான், மேலிடத்தின் வேலைத்திட்டம்!

இங்கு, இந்தி ஆதரிப்புப் பிரசாரம் புரிபவர்கள் இந்தச் சூதினை உணர்ந்திருக்கிறார்களோ இல்லையோ, நாமறியோம், காங்கிரஸ்காரர்களிலேயே பலர், வடநாடு சென்று திரும்புவர்கள், அங்கு இந்தி மொழியை வடநாட்டு ஏகாதிபத்யக் கருவியாக்கி, மற்ற மொழிகளை அழித்தொழிக்கும் திட்டம், பலருக்கு இருப்பதைத்தெரிந்து, திகைக்கிறார்கள்.

கொண்டா வெங்கடப்பய்யா கதறுகிறார்!

சத்தியநாராயணா என்பவர் சோகிக்கிறார்.

இந்திமொழி ஏகாதிபத்யம் கூடாது — இது உமது நோக்கமானால், நான் சகிக்க முடியாது என்று தோழர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் முழக்கமிட்டார், அரசியல் நிர்ணய சபையில்,

வேண்டுகோள், எச்சரிக்கை எதனையும் பொருட்படுத்தவில்லை, இந்திதான் அரசாங்க மொழி என்று பிடிவாதம் பேசுவோர், வெற்றிபெற்றுவிட்டனர் — எதிர்த்தோர் எள்ளி நகையாடப்பட்டனர். எழுந்து போமய்யா வெளியே! இந்தி தெரியாத உமக்கு இங்கு என்ன வேலை—என்று கொஞ்சம தடிக்குக் குணம் உடைய வடநாட்டார், அரசியல் நிர்ணய சபையில், தென்னாட்டுப் பிரதிநிதிகளைப் பார்த்துக் கேலியே செய்தார். இப்போது முன்ஷி, ஒருநாடு ஒருமொழி என்று வெளிப்படையாகவே! பேசுகிறார். இவ்வளவுக்கும் பிறகும், இந்தியை ஆதரிக்கிறார்கள்—இளித்தவாயர்களா அவர்கள்?—அல்ல, அல்ல, வடநாட்டு ஏகாதிபத்யத்தை வலிய வலிய வரவழைக்கும், "பரந்த உள்ளம் படைத்தோர்."

அரசியல் திட்டமோ, மாகாணங்களை ஆட்டிப்படைக்கும் அதிகாரத்தை மத்திய சர்க்கார் பெறுகிற விதமாகத் தீட்டப்பட்டிருக்கிறது.

மத்திய சர்க்காரிலே உத்யோகம் பெறுவதற்கோ, இந்திமொழி தேவை என்று கூறிவிட்டனர்.

மத்தியசர்க்காரின் காரியங்களோ, இந்திமொழி மூலம் நடைபெறுமாம்.

இந்திக்கு இந்த இடம் கொடுத்தான பிறகு, தமிழ் எதைக்கொண்டு வாழும், என்று இந்தி ஆதரிப்பாளர்கள் கூறுகிறார்கள்!!

மாகாண மொழிகளை 'மட்டரகம்' ஆக்கினது மட்டும் போதாது, உருக்குலைத்தே தீரவேண்டும், என்ற 'ஆசை'-திட்டமாகமாறிக் கொண்டு வருகிறது.

மொழிக்கு உள்ள வரிவடிவம், எழுத்து, அதனையே கூட அழித்து விடவும் திட்டமிட்டிருக்கிறார்கள்.

இந்தியா பூராவுக்கும்—எல்லா மொழிகளுக்கும் ஒரே லிபி-எழுத்து— இருந்தால்தான் நல்லது, வசதி, என்று பிரசாரம் நடைபெறுகிறது, பலமாக. இந்தியைப்படி, மத்ய சர்க்காரில் இடம் பெற—உன் தாய் மொழியையும் படிக்கத்தான் வேண்டும் என்று பிடிவாதம் செய்தால் (முன்ஷியின்பேச்சைக் கேட்க மறுத்து!) படிக்கும் தாய்மொழியை, தமிழை, தமிழ் எழுத்திலேலே படிப்பதை விட, தேவ நாகரி—லிபி கொண்டு படித்துக்கொள். தமிழுக்கு மட்டுமல்ல! வங்கம், தெலுங்கு, மலையாளம், மராட்டியம், எம்மொழியாக இருப்பினும், ஒரே லிபி போதும் — அது தேவநாகரியாக இருக்கட்டும்!—என்று கூறுகின்றனர்.

இந்தப் பேச்சு எந்த நிலையிலும் அளவிலும் இருக்கிறது என்று எண்ணுகிறீர்கள்?

திராவிடர் கழகம் என்றாலே தீப்பொறி பறக்கும் கண்ணினராக உள்ளவர், வடமொழி மீது விரோதம் கொள்வது கூடாது என்ற தாராள நோக்கமுடையவர், பெரியவிடத்துப் பிள்ளை என்ற கவசத்தோடு காட்சி தரும் காங்கிரஸ் இளைஞர், அமைச்சர் பக்தவத்சலத்தின்நெருங்கிய உறவினர் அழகேசன் எனும்பெயரினர், அவர் ஆத்திரத்துடன், அரசியல் நிர்ணய சபையிலே, தேவநாகரி லிபியைத் திணித்து மாகாண மொழிகளின் வடிவத்தை அழித்துவிடும், ஆதிக்க வெறி கூடாது—இதனால், ஒற்றுமை வளராது, வேற்றுமையும் விரோதமுமே வளரும் என்று கண்டித்துப் பேசவேண்டிய அளவுக்கு நிலைமை 'மோசமாகி' இருக்கிறது.

நண்பர் வரலாறு படித்தவர்—எவ்வளவுதான் 'வாத்சல்யம்' வேறிடத்தில் இருந்தபோதிலும், நாட்டுப் பற்று இராமலிருக்க முடியாது அவருக்கு—மொழிப்பற்றை ஒழித்து நாட்டுப் பற்றை அழிக்கும் ஆதிக்கத் தந்திரம் பல்வேறு இடங்களிலே நடைபெற்றிருப்பதை அவர் அறியாமலிருக்க முடியாது—அறிந்தவர்களின் முன்னிலையிலேதான் அவர் அதுபற்றிப்பேசியுமிருக்கிறார். தமது கண்டனத்தின் போது அவர் பயன்படுத்திய ஒரு சொல்லின், பொருள், கேட்டோருக்கு உறுத்தியே இருக்க வேண்டும்—சரித்திரத்திலே, இழிவாகவும் ஆபத்தானதாகவும் கூறப்படும், சொல்லை, வீசினார், அவர்கள் முன்னிலையில். CHAVINISM என்பது அச்சொல்! ஒரு அக்ரம சரித்திர சம்பவத்தின் சுருக்கம், அந்தச் சொல்!

ஜெர்மன் நாட்டிலே, கேய்சர் ஆட்சி செய்தபோது ஜெர்மனியை அடுத்துள்ள நாடுகளை அடிமைப் படுத்தி, ஐரோப்பிய சாம்ராஜ்

யத்தை அமைத்து, பிறகு, உலகை ஆளவேண்டும் என்ற திட்டம், இருந்தது, ஜெர்மன் வெறியர்களுக்கு. அடுத்த நாடுகளைப் பிடிக்கப் படைகளை ஏவுவதுமட்டுமல்ல, அவர்கள் கையாண்ட முறை—கலாச்சாரப் படை எடுப்பு நடத்தினர்—அந்தந்த நாட்டு மொழி, மக்களின் வாழ்க்கைவழி, ஆகியவற்றை அழித்தனர்-எங்ஙனம்? ஜெர்மன்மொழியே சிறந்தது, ஜெர்மன் வாழ்க்கை வழியே மேலானது, அதற்கு ஈடும் எதிர்ப்பும் இல்லை என்று வெறிகிளப்பி! நாடுகளிலே சிறந்தது, ஜெர்மன் நாடு! மொழிகளிலே சிறந்தது, ஜெர்மன் மொழி! ஆற்றலிலே சிறந்தவர்கள், ஜெர்மானியர்! அரசர்களிலே சிறந்தவர் ஜெர்மன் கெய்சர்! —இப்படி வெறிப் பிரசாரம் நடத்தப்பட்டது. பலநாடுகளிலே சென்று தங்கியிருந்த ஜெர்மனியருக்கு இந்த வெறி ஊட்டப்பட்டது! எதிர்ப்பு அழிக்கப்பட்டது! ஏகாதிபத்யம் பலப்பட்டது! ஆதிக்கம், சகலதுறைகளிலும் புகுத்தப்பட்டது! வளர்ந்தது வளர்ந்தது, அழிவு நேரிடும் வரையில் வளர்ந்தது!!

இந்த வெறிச்செயலைத் திட்டமிட்டுத் திறம்பட நடத்தியவர் பிஸ்மார்க். அவருடைய போக்கைத்தான், அன்பர் அழகேசன் குறிப்பிட்ட பெயரால், CHAVINISM 'ச்சாவினிசம்' என்று அழைத்தனர்! அது, இங்கே குடிபுகுந்திருப்பது கண்டு, மனம் குமுறி, உடையை, கட்சியை, இருக்கும் இடத்தை, எல்லாம் மறந்து இந்த வெறிச்செயல்கூடாது, என்று கூறினர்! இளைஞர்—தமிழர்—இயல்பு அடியோடு எப்படிப் போய்விடும்!!

தேவநாகரிலிபியை, நாடெங்கும் புகுத்தி, தனித்தனி மொழிகளுக்கு உள்ள, 'உருவத்தை' குலைத்துவிடத் திட்டம் இருப்பதும், அது பற்றிப் பேசுவதும், கண்டும்கேட்டும், அவர், உள்ளம் துடித்திருக்க வேண்டும்—ஏன் ஆதிக்க வெறி கொண்டு இவர்கள் அலறுகிறார்கள் என்று எண்ணினார். அவர் மனக் கண் முன், பிஸ்மார்க்கின் கல்லறை தெரிந்தது—துணிந்து சொல்லியேவிட்டார், பிஸ்மார்க்குக்கு இருந்த பித்தம் உங்களுக்கும் இருக்கிறது—இதை நான் கண்டிக்கிறேன், என்று!

அவர்கள் அவர் உரையிலே உள்ள எச்சரிக்கையை எந்த அளவுக்கு மதித்தார்களோ நாமறியோம். எடுத்துரைத்தாரே, அந்த வகையிலே நாம், மகிழ்கிறோம்—அவர் படித்த வரலாறு, இதைவிட வேறு அருமையான காரியத்துக்குப் பயன் பட்டிருக்க முடியாது! ச்சாவினிசம்-பிஸ்மார்க்கின் வெறித்திட்டம்!—ஆம்—அன்பர் அழகேசன் சொன்னது போல, திட்டம் அதுதான்—தெளிவாகத் தெரிகிறது—அதைவிடத் தெளிவாக, அந்தத் திட்டத்தின் கர்த்தாவின் கல்லறை மட்டுமல்ல—அந்த வம்சத்தவன் என்று கொக்கரித்த ஹிட்லரின்கோட்டை தூளானதும் தெரிகிறது! சரித்திரம் எச்சரிக்கை செய்கிறது—எனினும் சர்தார்கள் இருக்கிறார்கள் நமக்குச் சேவை செய்ய, என்ற எண்ணம் தைரியத்தைத் தருகிறது!

ச்சாவினிசம், பிஸ்மார்க் கையாண்ட வெறித்திட்டம்—ஆனால், அந்த வெறி, முதலிலே மிக மிகக் களங்கமற்ற மனஎழுச்சி அளவாகவே இருந்தது. அச்சொல்லுக்கு ஒரு சரிதம் இருக்கிறது.

சாவின் என்றோர் வீரன் இருந்தான்—நெப்போலியன் காலத்தில். அச்சமயம் எங்கு பார்த்தாலும் நெப்போலியன் வெற்றிமுரசுகேட்டபடி இருந்தது — நெப்போலியன் நெல்சனைச் சந்திக்காத காலம்—தோல்வியை அறியாத காலம். அப்போது, நெப்போலியனைக் கண்கண்ட தெய்வமாகக் கருதி, கொண்டாடி வந்தவன், இந்த சாவின்! கண்மூடிப் பக்தன்!! நெப்போலியனைப் போல வீரன், தீரன், கெம்பீரன், உதாரன், குணாளன், உலகிலே யாரும் கிடையாது! நெப்போலியனின் சொல்லே, சட்டம்! அவர்குழியில் விழச்சொன்னால், கண்ணைமூடிக் கொண்டு விழுவேன் — என்று எண்ணியவன், இந்த ஏமாளி சாவின். இந்தக் குருட்டுப்போக்குக் கொண்ட சாவின்போல, மக்களை ஆக்கி, ஆதிக்கத்தைப் புகுத்துவது, சாவினிசம் என்னும் பிஸ்மார்க் திட்டம்.

இப்போது இங்கு சாவின்கள் உள்ளனர் என்ற தைரியத்தால்தான் ச்சாவினிசம், நடத்தலாம் என்றதிட்டத்தைத் தீட்டுகிறார்கள்.—பிஸ்மார்க் பிறந்திருக்கிறார் — ஆதிக்கம், அரசியல், பொருளியல், என்பதோடுமட்டுமல்ல, மொழியில்புகுந்து, மொழிக்கு உள்ள எழுத்துக்கும் வருகிறது! இதைத்தான், நண்பர் அழகேசன் கண்டித்தார், ஆற்றோரத்தில் அல்ல, அனுமார் கோயில் மைதானத்தில் அல்ல, அரசியல் நிர்ணயசபையில்!!

அரசியல் நிர்ணய சபையினர், மாகாண மொழிகளைப் பாதுகாத்துக் கொள்ள உரிமையை வழங்குவதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றினர்.

தேவநாகரிலிபியைத்திணிக்க இது சமயமல்ல, இன்னும் கொஞ்சம் மயக்கம், உறக்கம், வரட்டும், பிறகு செய்துவிடுவோம், என்ற தைரியத்தில், இப்போது மிக மிக நியாயமாகவும், பெருந்தன்மையுடனும் நடந்துகொள்வதுபோல, பாவனைகாட்டி, மாகாண மொழிகளைப் பாதுகாத்துக்கொள்ளும் உரிமையை வழங்குவதாகக் கூறுகின்றனர்.

இதிலே உள்ள உட்பொருளை எண்ணினாலே வேதனை கிளம்பும்! மாகாண மொழிகள் அழிந்துபடும் என்ற அச்சம் எங்கும் கிளம்பிவிட்டதும், அழிக்கும் பிரச்சாரத் திட்டமும், அதைத் தொடர்ந்து அழிப்பு அமுலும் கிளம்பும் என்ற கிலி எங்கும் பரவி வருவதும், தெரிந்திருப்பதால் தானே, மாகாண மொழி பாதுகாத்துக் கொள்ள உரிமை வழங்கவேண்டிய நிலை பிறந்திருக்கும்.

இந்திக்குத்தான் துரைத்தன மொழி என்ற நிலை, அதைத்தான் படிக்கவேண்டும்— வேண்டுமானால்-முடிந்தால்—உங்கள் மாகாணமொழியைப்பாதுகாத்துக்கொள்ளுங்கள்—உங்களை யார் தடுக்கிறார்கள்?- என்று கூறுகிறார்கள், பிஸ்மார்க் வழிவந்தோர்! கேலி அல்லவா அது! ஏழையிடம் சீமான்பேசும்பேச்சுப்போன்றதல்லவா அது? "உன்பொருள்எனக்கேனடா முட்டாளே! கடனை, வட்டியுடன் திருப்பிக் கொடுத்துவிட்டு, உன்வீட்டைத் தாராளமாக நீயே எடுத்துக்கொள் — எனக்கேன் உன் வீடு-" என்று பேசுவதுபோலல்லவா இருக்கிறது, இந்தியை அரசபீடத்தில் அமர்த்திவிட்டு, இந்தி படித்தாக வேண்டும் என்று கட்டளைபிறப்பித்துவிட்டு, உங்கள் மொழியைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள் — உங்களுக்கு அந்த உரிமை உண்டுஎன்று கூறுவது!

மாகாண மொழி, எப்படிப் பாதுகாக்கப்படும்?

பழங்காலத்தில் இருந்த தோதவர்கள், இன்று நீலகிரியில், பாதுகாக்கப்படுகிறார்களல்லவா, அது போல!!

சர்க்கார், பணம்கூடச்செலவிடுகிறார்கள், பழங்காலமனிதர்கள்பூண்டு

அழிந்து போகாதிருக்க, பழங்கால மிருகங்களின் எலும்புக்கூடுகள் தகர்ந்து போகாதிருக்க, பழங்காலக் கோட்டைகள் அடியோடு மண்மேடு ஆகாதிருக்க—அதுபோல, தமிழறிஞர் கூறினாரே, தொன்மைமொழி, எமது இனிமைத்தமிழ்மொழி என்று! அந்தமொழியும் பாதுகாக்கப்படும்-பழங்காலச் சிறப்பின் இக்கால நிலை இதுவென்று எடுத்துக்காட்ட! நாடாண்ட மன்னனை, சதியால் வீழ்த்திமுடிதரித்துக்கொண்டதூர்த்தன், மன்னனுக்கு அரண்மனையில் எங்கும் உலவும் உரிமை தருகிறேன் என்று கூறி, தன் 'அடைப்பம்'தாங்கும் ஆளாக்கிக்கொண்ட கதையைப் படித்திருக்கிறோம்-இதோ கண்ணியவான்கள் அதேமுறையில், பேசக் கேட்கிறோம்.

ஏன் எதிர்க்கிறார்கள் இந்தியை—என்று உண்மையாகவே விளக்கம் பெறாததால், சந்தேகிக்கும் நண்பர்கள், எவ்வளவு கேடான, சூழ்ச்சியான மொழிஏகாதிபத்யம், நம்மை நசுக்கக்கிளம்பி இருக்கிறது என்பதை உணர்ந்தால், மொழிப்போர் நடாத்தும் உரிமையை, நம்மிடமிருந்து பறித்துக்கொண்டு தாங்களே நடத்த முன்வருவர்!

பிஸ்மார்க் வருகிறார்!- சாமான்யமான ஆபத்தல்ல! கூறுபவரும் நாமல்ல-காங்கிரஸ்காரரே கூறுகிறார்.

தமிழ், புறக்கடைக்குத் துரத்தப்படுகிறது-இந்தி அரசபீடம் ஏறுகிறது-!.

தாய்மொழி, தாய்மொழி என்று பேசி, தனி உணர்ச்சியை வளர்க்க இடந்தராதீர், இடித்துத்தரைமட்டமாக்குங்கள், மொழி அன்பைஎன்று முழக்கமிடுகிறார் முன்ஷி!

தனித்தனி மொழிகள் இருப்பது மட்டுமல்ல, தனித்தனி வரிவடிவம், எழுத்து இருப்பதே தவறு — தேவநாகரிலிபியிலேயே எவரும், எதையும், எங்கும், எழுதட்டும், என்று கூறுகிறார்கள், ஏகாதிபத்யப்போக்கினர்.

இந்த 'ஆபத்தை' எதிர்த்து நடத்தப்படுவதே அறப்போர்!

ஆனால் இதற்கு அழகேசர்கள் எதிர்ப்பு!! வேதனைதரும் விசித்திரம்—ஆனால் உண்மை!

# "கொலைகாரி!"

'கொலைகாரி' சட்டம் குற்றஞ் சாட்டுகிறது. மதிமிகுந்தவர்கள் முதல், அது குறைந்தவர்கள் வரை ஏகோபித்துக் கூறுகிறார்கள், 'கொலைகாரி' என்று.

குழந்தைகளைக் கொன்றாள்—ஒன்றா இரண்டா—மூன்று! யாரார் பெற்றுவிட்ட குழந்தைகளா? இல்லை! அவளே பெற்றெடுத்த குழந்தைகள். தனது மணிவயிற்றிலே, சுமந்து பாதுகாத்து உருவான மூன்று குழந்தைகள். அவள் தாய்—கொலையுண்டது அவளுடைய மூன்று குழந்தைகள்—அதுவும் அவளாலேயே கொலையுண்டன. கொடுமை—அனைவரும் ஒருமித்துக்கூறுவர் இதனை.

ஈ நாடாமல், எறும்பு கடிக்காமல், குளிர் தாக்காமல், குறிப்பறிந்து வேளாவேளையில் பாலூட்டி, மந்தம் தட்டினால் கார உண்டை போட்டு, மாந்தம் கண்டால் மருத்துவரை நாடி, மூன்று குழந்தைகளையும் வளர்த்து விட்டதாய் கொன்றாள்—கொலைகாரியானாள்! வேடிக்கை அல்ல—வேதனை தரும் உண்மை நிகழ்ச்சி. தென்காசியிலே நடந்தது இது. தவறிழைத்த குழந்தைகளை, தண்டித்துத் திருத்தும் உரிமைபெற்றுள்ள தாய், தண்டிக்கிறாள் — குழந்தைகள் குற்ற மிழைத்ததற்காக அல்ல—குழந்தைகளிடம் வெகுண்டு அல்ல—கொண்டுள்ள பற்றுக்காகவும், வைத்துள்ள வாஞ்சைக்காகவும். குழந்தைகள் மேல் உள்ளபாசம்—கொலைகாரி ஆக்கிற்று அவளை!

'எப்படி மனந்துணிந்தாளோ பாவி' இரக்கம் தங்களுக்கு மட்டும் இருப்பதாக எண்ணிக் கொண்டிருப்பவர்கள், அளிக்கிறார்கள் இந்த நற்சாட்சிப்பத்திரத்தை!

'பெற்ற பிள்ளைகளேயே கொன்றாளே-அவள் தாயா? பெரும் பேய்!' இவ்வாறு பேசுகிறார்கள் சிலர்.

'தூக்கு — இவளுக்குச் சர்வ சாதாரணம்; சித்திரவதை செய்ய வேண்டும்—அதுவே, இந்தக் கள்ளிக்கேற்ற தண்டனை!' ஏதோ நீதி அளிக்கும் பொறுப்புத் தங்களுக்குத்தான் இருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறவர்கள் அளிக்கும் தீர்ப்பு இது!

"ஆம்! நான் கொலைகாரிதான்! இல்லை என்று எப்படிச் சொல்வது? சில விநாடிகளுக்கு முன்பேசி இருந்தனவே இந்த உருவங்கள்—அந்தச் சிறு கண்கள் நீர்த்திவலைகளைச் சிந்தினவே—'பசி' என்னும் ஒலி சிறுவாய்களிலிருந்து மிருதுவாக எழுந்தனவே—கைகால்கள்கூட மென்காற்றில் தவழும் பச்சிலைகள் போன்று அசைந்து கொண்டிருந்தனவே—அவ்வளவையும் ஒரு நொடியில் ஒழித்துக்கட்டினவள் நான் அல்லவா? பேசும் பதுமைகளை வெறும் பிணமாக்கி விட்டபாவி நான்தானே? பின், நான் கொலைகாரி என்னும் பட்டத்திற்குப் பாத்திரமற்றவளாக எப்படி இருக்கமுடியும்?" இவ்வாறு கொலைகாரியும் எண்ணுகிறாள்.

'பெற்றெடுத்த மூன்று குழந்தைகளைப் பிணமாக்கினேன்! ஆம்! கொலைகாரி—கொடியவள்—பேய்—இன்னும் எனக்கு எந்தப்பெயர் வேண்டுமானாலும் வைத்து அழைத்துக் கொள்ளட்டும். நான் குற்றவாளிதான்—அதற்கான தண்டனையும் தரவேண்டியது தான்! ஆனால்—ஆனால்—? என் குழந்தைகளிடத்தில், நான் கொண்டிருந்த பாசத்தின் காரணமாகத்தான், ஈ எறும்பு கடிக்காமல் பாதுகாப்புத் தேடுவதற்கு எந்த அன்பு தூண்டுகோலாக இருந்ததோ, அதே அன்பின் அடியாகத்தான், பெற்றபொழுது நான் கொண்ட மகிழ்ச்சிக்கு எந்தப்பற்றுதல் தூண்டுகோலாக இருந்ததோ, அதே பற்றுதல் காரணமாகத்தான், என் குழந்தைகளைப் பிணமாக்கினேன். புரிந்து கொள்ளுமா இதனை உலகம்? என் உள்ளத்தில் மறைந்து கிடக்கும் தாய்மையின் தன்மையை, இந்த உலகத்தினரால் அறிந்து கொள்ள முடியாது! தாயின் பொறுப்பும்—கடமையும் தெரிந்துதான், என் குழந்தைகளுக்கு நிலையான அமைதியை வலிய வலியத் தேடிக்கொடுத்தேன். நான் தாய்—பிறர் நினைப்பதும் நவைசைப்பதும் போன்று பேயல்ல! என் செய்கையில் மறைந்துள்ள உண்மையை—அதன் தாய்

மையை—செயலால் நிலை நாட்டப்பட்ட என் தாய்மையை அறியாத மக்கள் எதுவேண்டுமானாலும் கூறிக்கொள்ளட்டும், எனக்கில்லை கவலை!'

இவ்வாறு பேசிக்கொண்டது அவள் உள்ளம்.

இன்று, அவளைக் 'கொலைகாரி' என்று தூற்றும் கண்டனக் குரல், அவள் கணவன் வேலையற்றுத் திண்டாடின பொழுது, காண்பவர்களிடமெல்லாம் வேலைகொடுங்கள் என்று மண்டியிட்டுக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டபொழுது, 'ஐயோ பாவம்! மூன்று குழந்தைகளுக்குத் தகப்பனாயிற்றே அவன், அவர்களைக் காப்பாற்றவேண்டிய கடமை உடையவனாயிற்றே, ஏதாவது இவனுக்கு வேலை கொடுப்பதின் மூலம் இவனையும் இவன் குடும்பத்தையும் காப்பாற்றுவோம்' என்று நல்லறிவு கொள்ளாமல், 'எப்படியோ போகட்டும், கெட்டு அழியட்டும், நமக்கென்ன கவலை' என்றிருந்த சமுதாயந்தான், மூன்று சிறு பிணங்கள் தம் கண் முன்னர் இருப்பதைக்கண்டதும், பிணமாக்கிய பேதை—அதுகளைப் பெற்றெடுத்த தாய் தான் என்று உணர்ந்ததும், உரிமைகொண்டாடுகிறது—அவளைக் கண்டிக்க—கொலைகாரி என்று ஏச!

வேலைகிடைக்காத கொடுமையைக் கூறினான், 'சீ, போடா தடியா!' என்று சீறி விழுந்தது சமுதாயம். வாடி வதங்கிப்போய் இருக்கிற வயிற்றைக் காட்டி வாதாடினான், 'வீணனே வேறு இடம்தேடு!' என்று வெடுக்கென்று பேசிற்று சமுதாயம். மனைவி உண்டு என்று கூறி வேலைக்குக் கெஞ்சி நின்றான், 'மனைவி ஒரு கேடா' என்று கிண்டல் செய்தது சமுதாயம். பசியால் வாடும் இளஞ்சிறுர் மூவர் உண்டு என்று தனக்குள்ள பொறுப்புணர்ச்சியை விளக்கி வேலை தேடினான், அப்பொழுதாவது இரக்கம் காட்டியதா இந்தச் சமுதாயம்? இல்லை! ஆனால், நீதி பேசமட்டும் அதன் நாக்கு நீண்டு விடுகிறது!

குழந்தைகளின் பரிதாபக் குரல்—அதனைக் கண்டு சகிக்காது நீர் பெருக்கும் மனைவியின் கண்கள்—கருணை காட்டாத சமுதாயம்—கணவனை மனமுடையச் செய்துவிட்டது என்பது மட்டுமல்ல, அவனுடைய கடமையிலிருந்து தவறவும் செய்துவிட்டது. வீடு வேப்பாயிற்று. மனைவி எட்டியானாள். குழந்தைகள் வேதனையை வளர்க்கும் சின்னங்களாயின; வெளியேறிவிட்டான் வகையற்று!

பெற்ற தாய் எவ்வாறு குழந்தைகளை விட்டுப்பிரிய முடியும்? கட்டினவன் கைவிட்டு விட்டான். கயிறு இருக்கிறது கழுத்தில். அவன் கொடுத்த சுகத்தின் உருவான பலனாக மூன்று குழந்தைகள் இருக்கின்றன. அவைகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும், எப்படிச் சாத்தியமாகும் என்பதால் ஏற்படும் அவநம்பிக்கையும், அவள் உள்ளத்தில் வேதனை ரூபத்தில் குடிபுகுந்து கொண்டது.

வீடு வீடாக ஏறினாள், நடமாடும் பாவைகளைக் காட்டினாள், அழுதாள், அலறினாள், அகப்பட்டதைக் கொண்டு, சிலகாலம் குழந்தைகளை உயிரோடு இருக்கச் செய்தாள். தானும் அரை உயிரோடு இருந்தாள். ஆனால், அந்தச் சிலகாலம், தினம் தினம், நிமிஷத்திற்கு நிமிஷம், தான் பிச்சை கேட்ட நேரத்தில், இந்தச் சமுதாயம் பேசிய பேச்சு, திட்டிய திட்டு, அவளுடைய இருதயத்தைத் தீயாகச் சுட்டது. இருந்தாலும சகித்துக்கொண்டாள் — அவள் தாயல்லவா — குழந்தைகளுக்காக!

அவளுடைய தொழிலிலே, அவளுக்கு நாளாக நாளாக நம்பிக்கை குறைந்தது. கண்டிப்பாக இன்று சோறு கிடைக்கும் என்ற நிலையற்ற தன்மையில், எவ்வளவு காலத்திற்குத்தான் நம்பிக்கை கொண்டு, தன்னையும், தன் குழந்தைகளையும் காப்பாற்றிக்கொண்டு வாழ முடியும்? குழந்தைகள் எலும்பும் தோலுமாக மாறி இருக்கும் கோரக் காட்சி, 'பசிக்கிறது' என்று கூறுவதற்கும் சக்தி இழந்து உதடசைத்துக் குறிப்பிடும் கொடுமை, பிச்சை கேட்கும் பொழுது பிறர், முகத்தால் அடிக்கும் கொடுமையைக் காட்டிலும், வேதனைதரக் கூடியதாக அவளுக்கு இருந்தது. எந்தக் குழந்தைகளின் தோற்றம் தாய்மையின் தன்மையை வளர்த்ததோ, எந்த மழலை மொழி—குறு குறு நடை—தாயின் அன்பைப் பெருக்கிற்றோ, அதே செயல்கள் பட்டினியால் குழந்தைகளிடம் மாற்றமுற்று விடவே, அதனைக் கண்டு சகித்துக்கொண்டு மேலும் உயிர் வாழ்வது, ஒரு தாயின் சக்திக்கு மீறினதாக இருப்பதைக் கண்டாள். இந்தத் துன்பத்திற்கு முடிவு கட்டத் தீர்மானித்துவிட்டாள். எவர் தயவும் தாட்சண்யமும் தனது முடிவிற்குத் தேவையில்லை என்று தீர்மானித்து விட்டாள் பேதை! அதற்கான உரிமை, தனக்கு இருப்பதாக உறுதியான நம்பிக்கை கொண்டாள்.

வாழ்க்கைப் போராட்டத்தில், தனது முடிவின் மூலம், வெற்றி கிடைத்துவிடும் என்றே நம்பினாள். இன்னும் சில விநாடியில், தன்னால் தாங்கமுடியாத வாழ்க்கைச் சுமையை வீசி எறிந்துவிடப் போவதாக மனக்கோட்டை கட்டினாள்.

பத்துத் திங்கள் தனது வயிற்றில் வைத்து வளர்த்து உருவாக்கிய ஒன்றை — பத்தியம் இருந்து பாராட்டி வளர்த்த ஒன்றை—பல நாள் பல இழிச் சொற்களையும் தாங்கிக் காப்பாற்ற அரும்பாடு பட்ட ஒன்றை — மனம் துணிந்து வீசி எறிந்தாள் கிணற்றில்! கண்ணை இறுக்கி மூடினாள் — தான் பெண்ணாகப் பிறந்ததிலிருந்து மூன்று குழந்தைகளுக்குத் தாயாகிக் கிணற்றருகில் நிற்கும் வரையில், தனது வாழ்நாளில் நிகழ்ந்த சம்பவங்கள் அனைத்தும், தனது உள்ளத்திரையில் தோன்றி மறைந்ததை உணர்ந்தாள். கண்ணைத்திறந்தாள்! மற்றொரு குழந்தைக்கும் விடுதலை தந்தாள். மூன்றும்குழந்தையும் நீருக்குள் சென்றது. மரணத்தைத்தழுவ, அவளும் கிணற்றுக்குள் தாவினாள்!

சமுதாயம், அவளைக் கிணற்று வரையில் துரத்திச் சென்றும், அவளை விட்டுவிட ஒருப்படவில்லை. அவளுடைய பரிதாபமான முடிவு, சமுதாயத்திற்கு இதுவரையில்லாத இரக்கத்தையும் புதிய பொறுப்பையும் கொடுத்து விட்டது. அவளுக்குச்சோறு அளித்து வாழ்வளிக்க மறுத்த சமுதாயம், அவளை இழந்துவிடவும் துணிவு கொள்ளவில்லை! சிறுதும்பியைப் பிடித்து, அதன் ஒவ்வொரு காலையும் பிய்த்து எறியும்

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street, Kancheepuram.